வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P .1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர் ஈழநாடு








Email : news@eelanadu.lk | மலர் : 06 | 12.10.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 285 | பக்கங்கள் : 16


# சட்டவிரோத செயல்பாடுகள் வடமாகாணத்தில் அதிகரிப்பு

## பொலிஸாரின் ஒத்துழைப்பு போதாது மாவட்ட செயலாளர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 12

**வடக்கு மாகாணத்தில் சட்டவிரோத செயல்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் பொலிஸாரின் ஒத்துழைப்பு போதாது என மாவட்ட செயலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**



வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், வடக்கு மாகாணத்துக்குரிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கும் 15

## வாக்குறுதிகளுக்கு எதிராக நாம் செயல்படமாட்டோம்!

### அமைச்சர் லால் காந்த

கொழும்பு, ஒக். 12

நாங்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு எதிராக ஒருபோதும் செயற்படமாட்டோம் என கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் லால் காந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் மக்களுக்கு ஒரு வாக்குறுதியை வழங்கினோம் அல்லவா, அமைச்சரவையில் 25 பேருக்கு மேல் இருக்கமாட்டார்கள் என்று. இப்போது 25 15

## பிரதமர் இன்று சீனா பயணம்

கொழும்பு, ஒக். 12

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, இன்று சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

சீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அவர், ஒக்ரோபர் 12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை சீனாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தின்போது, பீஜிங்கில் "ஒரு 15

## பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால் மகிந்தவின் அரசாங்கத்தில் அமைச்சர்!

### கூறுகிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, ஒக். 12

2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வடக்கு கிழக்கு மக்கள் வாக்களிக்காமல் இருப்பதற்காக தமிழீழ விடுதலை புலிகளுக்கு பணம் வழங்கப்பட்டதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்த காலத்தில் எங்களுக்கு சீனாவிலிருந்து தோட்டாக்கள் வழங்குவது நிறுத்தப்பட்ட பிறகு, எங்களிடம் பீரங்கி தோட்டாக்கள் தீர்ந்துவிட்டன. நிலைமை குறித்து பாதுகாப்புச் செயலாளர் கோட்டபய ராஜபக்ஷவிடம் தெரிவித்தோம். அதற்கு அவர் சீனாவிலிருந்து தோட்டாக்களை 15

## நாட்டுக்கு வரும் முதலீடுகளின் பாதுகாப்புக்கு அரசு உத்தரவாதம்!

### ஜனாதிபதி அநுரகுமார அறிவிப்பு

கொழும்பு, ஒக். 12

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் முதலீட்டாளர்கள் மற்றும் நாட்டுக்கு வரும் முதலீடுகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

நாட்டின் முதலீட்டு வாய்ப்புகள், வர்த்தக சூழல் மற்றும் சட்ட நிலைமைகள் குறித்து ஆய்வு செய்யும் நோக்கில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகள் குழுவுடன் நேற்றுக் காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் முதலீடுகளுக்குப் பாதுகாப்பான சூழல் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், முதலீடுகள் தொடர்பாக முந்தைய அரசாங்கங்களின் கீழ் இருந்த முறைகேடுகளை மாற்றித் தற்போதைய 15

## மாகாண சபை தேர்தலை நடத்த நாட்டில் எந்தச் சட்டமும் இல்லை!

### தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 12




மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு நாட் டில் எந்தச் சட்டமும் இல்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித் துள்ளார்.

ஏற்கனவே உள்ள சட்டம் ரத்து செய்யப்பட்டு, அதன் இடத்தில் தயாரிக்கப்பட்டு 15

## கிணற்றில் தவறி விழுந்த வயோதிப பெண் மரணம்!

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்ப்பாணம் - அராலி பகுதியில் வயோதிபப் பெண் ஒருவர் நேற்று தவறி கிணற்றில் விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையை சேர்ந்த அரியகுட்டி புவனேஸ்வரி (வயது 69) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுப்பதற்காக முயற்சித்தவேளை கால் தவறி கிணற்றினுள் விழுந்து உயிரிழந்துள்ளார். 15

## அரசாங்கத்தை ஆட்டம்காண வைக்கும் அடுத்த கட்ட நகர்வு

### ரணில் தலைமையில் வியூகம்

கொழும்பு, ஒக். 12

முன்னாள் ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவுக்கும், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பல கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான விசேட பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதியின் அலுவலகத்தில் இந்தப் 15

## மின்சார கட்டணம் அதிகரித்தால் வீதியில் இறங்கி போராடுவோம்!

### சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 12

நாட்டில் மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டால் போராட்டங்கள் வெடிக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை செயலகத்தில் டி.எஸ். சேனநாயக்க அரசியல் கற்கைகள் பீடத்தின் திறப்பு விழா, எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசவின் பங்கேற்புடன் நேற்று இடம்பெற்றது. 15

## ஒன்லைன் வர்த்தகத்தால் ஒரு கோடி ரூபா நட்டம்!

### இளம் குடும்பஸ்தர் உயிர் மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

ஒன்லைன் வர்த்தகத்தில் ஒரு கோடி ரூபா பணத்தை இழந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாணம் - கட்டுவன் பகுதியை சேர்ந்த தங்கராசா ராஜ்குமார் (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் அமெரிக்க கம்பனி ஒன்றில் 15

## பாதுகாப்பு வாகனங்களை மீளவும் கோரியுள்ள மகிந்த, மைத்திரிபால!

கொழும்பு, ஒக். 12

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷவும் மைத்திரிபால சிறிசேனவும் அரசாங்கத்திடம் ஒப்படைத்த அவர்களது பாதுகாப்பு வாகனங்களை மீளக் கோரியுள்ளனர்.

பொது மக்கள் பாது காப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புவாகனங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்தமையால் அவர்களின் பாதுகாப்புக்கு ஏதேனும் அச்சுறுத்தல் காணப்படுமாயின் அந்த வாகனங்களை மீண்டும் 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை வைக்கக்கூடிய வகையில் பொலிஸார் செயல்படுதல் வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், ஒக். 12

**மக்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய வகையில் பொலிஸாரின் நடவடிக்கைகள் அமையவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**



இதேவேளை, காணி மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுத்தமையை வரவேற்ற ஆளுநர், அதனைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறும் வலியுறுத்தினார். அத்துடன் கடந்த காலங்களில் இடம்பெற்றதைப் போன்று மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பொலிஸாருக்கும் ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், வடக்கு மாகாணத்துக்குரிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கும் வடக்கின் 5 மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்கள் மற்றும் ஆளுநர் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், பொலிஸாரின் நடவடிக்கைகளில் முன்னேற்றம் இருப்பதாகவும் ஆனாலும் இன்னமும் சில பொலிஸ் நிலையங்களில் மக்களின் முறைப்பாடுகளை ஏற்க மறுகின்ற சம்பவங்கள் நடைபெறுவதாகவும் சுட்டிக்காட்டினார். மக்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய வகையில் பொலிஸாரின் நடவடிக்கைகள் அமையவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பாடசாலை நேரங்களில் கனரக வாகனங்களால் ஏற்படும் நெரிசல்கள் மற்றும் விபத்துக்கள் தொடர்பில் ஆளுநரால் சுட்டிக்காட்டப்பட்டது. பாடசாலைகளுக்கு முன்பாக பொலிஸார் கடமையிலுள்ள போதும் வீதிகளில் நெரிசல் காணப்படுவதாகத் தெரிவித்த ஆளுநர், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மேலதிக பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துமாறு கேட்டுக்கொண்டார். இதேபோன்று, பாடசாலைகளுக்கு அண்மையாக வீதிகளில் கனரக வாகனங்கள் தரித்து நிற்பதை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். பிரதான வீதிகளின் கரையோரங்களில் வாகனங்கள் தரித்து நிற்பதால் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடி தொடர்பாகவும் சுட்டிக்காட்டினார். பொலிஸாரின் ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே இவற்றைக் கட்டுப்படுத்தலாம் எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வேம்படிச் சந்தியிலுள்ள சமிக்ஞை விளக்குப் பகுதியில் பாடசாலை நேரங்களில் சமிக்ஞையைக் கவனியாது பெற்றோர் மாணவர்களுடன் பயணிக்கின்றனர். இவ்வாறான செயல்பாடுகள் ஆபத்தானவை என்பதால் பொலிஸார் பாடசாலை நேரங்களில் இத்தகைய இடங்களில் கட்டாயம் கடமைகளில் ஈடுபடவேண்டும்.

வீதிகளில் இரவு நேரங்களில் குப்பைபோடுபவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் பொலிஸாரின் ஒத்துழைப்பை கோருகின்றமை தொடர்பில் ஆளுநர் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினார். சுற்றாடல் பொலிஸாருடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் பணியாளர்களையும் ஈடுபடுத்த தயாராக இருப்பதாகவும், குப்பைகள் அடிக்கடி போடப்படும் பிரதேசங்களை இனங்கண்டு அந்தப் பகுதிகளில் சுற்றுக்காவல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் இடம்பெறும் சமூகச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் ஆளுநர் வலியுறுத்தினார். (எ-03)

# 17 இந்திய மீனவர்களுக்கும் 15 ஆம் திகதி வரை மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 12

இந்தியாவின் பாண்டிச்சேரியை சேர்ந்த 17 மீனவர்கள் நெடுந்தீவு கடற்பரப்பில் ஒரு படகில் வந்து மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடற்படையினரால் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 17 மீனவர்களும் கடற்படையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளின் பதிவு நடவடிக்கைகளுக்கு பின்னர் அவர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் முன் ஆஜர்படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கை விசாரித்த ஊர்காவற்றுறை நீதிவான் நளினி சுபாஸ்கரன், எதிர்வரும் 15ஆம் திகதிவரை மீனவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்

இதேவேளை வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 36 படகுகளுடன் 279 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-03)

# குறளிசைக்காவியம் பாகம் 02 யாழ்ப்பாணத்தில் வெளியீடு



யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் புகழ்பெற்ற இசைக் கலைஞர் லிடியன் நாதஸ்வரம் மற்றும் அவரது சகோதரி அமிர்தவர்ஷினி ஆகியோரின் குறளிசைக் காவியத்தின் பாகம் -02 வெளியீடு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.


சகோதரர்களான இவர்கள் இருவரும் இணைந்து இசை அமைத்து திருக்குறளின் 1330 குறள்களையும் அவற்றின் பொருள்களையும் பாடல்களாக வழங்கியுள்ளனர். சுமார் 10 வருடங்களுக்கு முன்னர், அதாவது லிடியன் நாதஸ்வரத்துக்கு 9 வயதும் அமிர்தவர்ஷினிக்கு 12 வயதும் இருக்கும்போது இந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டது. 10 வருடங்கள் கடந்த பின்னர் அவர்களின் படைப்பு வெளியிடப்பட்ட நிலையில் பலரும் அதற்கு பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடகர்கள் இதில் பாடியுள்ளனர். குறிப்பாக தேனிசை தென்றல் தேவா, உன்னிமேனன் உட்பட பலர் பாடியுள்ளதுடன் இலங்கையில் இருந்தும் 25 இற்கு மேற்பட்ட பாடகர்கள் பாடியுள்ளனர்.

இதன் முதல் வெளியீடு தமிழகத்தில் நடைபெற்ற நிலையில் இரண்டாவது வெளியீடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இந்த படைப்புக்கு ஏ.ஆர். ரஹ்மான், வைகோ, திருமாவளவன் உட்பட பலர் தமது வாழ்த்துகளை வழங்கியிருந்தனர்.

குறளிசைக்காவியம்- பாகம் 02 வெளியீட்டின் முதல் இறுவட்டினை யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து ஏனைய இறுவட்டுகளை பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ். தமிழ்ச்சங்க செயலாளர் எஸ். லலீசன், பாரதியாரின் கொள்ளுப்பேரன் நிரஞ்சன் ஆகியோர் வெளியிட்டு வைத்தனர். (எ-05)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஞானச்சுடர் மலர் வெளியீடு



யாழ்ப்பாணம், ஒக்.12

சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்தம் வெளியீடு செய்யப்படும் ஆன்மீக மலரான ஞானச்சுடர் 333 ஆவது இதழ் வெளியீடு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர், கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பஞ்ச புராண ஓதுதலுடன் ஆரம்பமான நிகழ்வில் வெளியீட்டுரையை ஊடகவியலாளர் சி.த. காண்டீபன் நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணம் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தி நிகழ்த்தினார்.

தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்பட்டன.

உதவித் திட்டங்களாக, 146, 550 ரூபாய் பெறுமதியான 03 துவிச்சக்கர வண்டிகளை கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த, தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலயத்தில் தரம் 08 இல் கல்வி கற்கும் மாணவி, வரியப்புலம், சுன்னாகம் பகுதியை சேர்ந்த, இணுவில் மத்திய கல்லூரியில் தரம் - 09 இல் கல்வி கற்கும் மாணவி, மூளாய் வீதி, சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த, தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியவர்கள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள் நிர்வாகிகள், ஞானச்சுடர் வாசகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ)

# ரயிலில் மோதி யானை பலி!

முல்லைத்தீவு, ஒக். 12

இரவு நேர ரயிலில் மோதி காட்டு யானை ஒன்று பலியானது.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு 10.20 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இரவு நேர ரயிலில் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பனிக்கங்குளம் பகுதியை அண்மித்த பகுதியில் இவ் விபத்து இடம்பெற்றது. (எ)

# வடமராட்சியில் தடைசெய்யப்பட்ட மீன்பிடியில் ஈடுபட்ட ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 12

வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் படகுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் வெற்றிலைக்கேணி கடற்படையினர் தொடர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்

இதன் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் தடை செய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட நபரும் உடைமைகளும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 6 முதல் 8 மாணவர்களுக்கு சட்டக்கல்வியை இணைக்க முடிவு

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12

பாடசாலை மாணவர்களுக்கு சட்டக்கல்வியை இணைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தரம் 6 முதல் 8 வரையான பாடவிதானங்களில், குடியுரிமை பாடத்தில் சட்டக் கல்வி தொடர்பான பகுதியை இணைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி மறுசீரமைப்பின் போது சாதாரண தரத்திலும் இதனை தெரிவுப் பாடமாக இணைக்க எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இதன்படி, குடியுரிமை பாடத்தில் 6ஆம் தரத்துக்கான சட்டக்கல்வி, மூன்றாம் தவணைக்கான மாதிரியில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒழுக்கமான சமூகத்துக்காக சட்டம் தொடர்பில் அறிந்து கொள்ள வேண்டும் என்பதை கருத்தில்கொண்டே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மேலும் தெரிவித்தார். (எ)



# மாலதியின் 38ஆம் ஆண்டு நினைவு நாள் அனுஷ்டிப்பு

மன்னார், ஒக். 12

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் வீரமரணமடைந்த முதல் பெண் போராளி மாலதியின் 38ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் ஆக்காட்டி வெளியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

குடும்ப உறவுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர், அருட்தந்தை, முன்னாள் போராளிகள், உறவினர்கள் உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாலதியின் உருவப்படத்துக்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (எ)

# புதுக்குடியிருப்பில் ஐஸ் போதைப்பொருளுடன் இளம் தம்பதியரும் இளம் பெண்ணும் கைது

முல்லைத்தீவு, ஒக். 12

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திம்பிலி பகுதியில் யாருமற்ற வீட்டிலிருந்து ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த திடீர் நடவடிக்கையின் போது, 22 வயதுடைய இளம் குடும்பஸ்தரிடமிருந்து 10 கிராம் ஐஸ் போதைப்பொருளும் அவருடைய 18 வயதுடைய மனைவியிடமிருந்து 80 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் குறித்த வீட்டில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 20 வயதுடைய இளம் பெண்ணிடமிருந்து 9 போதை மாத்திரைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த திடீர் சோதனையின் போது மூவரும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக புதுக்குடியிருப்பு பொலிஸாரின் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(எ)

# தேசிக்காய் விலை உச்சம்

பதுளை, ஒக். 12

பதுளை மாவட்ட சந்தைகளில் ஒரு கிலோ தேசிக்காய் 3,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

தேசிக்காய் அறுவடை குறைந்ததாலும் தேவைக்கு ஏற்ப விநியோகிக்க முடியாததாலும் இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலைமை நீண்ட நாட்களாக தொடர்வதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர். (எ)

# ஒவ்வொரு நாளும் 15 பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிப்பு

கொழும்பு, ஒக். 12

இந்த நாட்டில் ஒவ்வொரு நாளும் 15 பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுவதால் 20 வயதுக்குப் பிறகு ஒவ்வொரு மாதமும் பெண்கள் சுய மார்பகப் பரிசோதனை செய்து கொள்ளவேண்டும் என்று சுகாதார அமைச்சின் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

20 முதல் 40 வயதுக்குட்பட்ட பெண்கள் ஒவ்வொரு 3 வருடங்களுக்கும் மருத்துவ மார்பகப் பரிசோதனை செய்து கொள்ளவும், 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஒவ்வொரு ஆண்டும் மருத்துவ மார்பகப் பரிசோதனை செய்து கொள்ளவும் இந்தப் பிரிவு பரிந்துரைக்கிறது.

மார்பகங்களில் கட்டிகள், மார்பகத்தின் தோல் மங்கலாகுதல், மார்பக வீக்கம், அசாதாரண வெளியேற்றம் அல்லது முலைக்காம்பிலிருந்து இரத்தப் போக்கு, முலைக்காம்பில் பள்ளம், மார்பகங்களில் வலி அல்லது தோலில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற அறிகுறிகள் அல்லது ஆபத்து காரணிகளை அனுபவித்தால் பெண்கள் மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சையைப் பெற வேண்டும் என்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# நைஜீரியாவை சேர்ந்தவர் யாழ். நாவற்குழியில் கைது

யாழ்ப்பாணம், ஒக். 12

நைஜீரியாவை சேர்ந்த ஒருவர் விசா இன்றி நாவற்குழி பகுதியில் தங்கியிருந்த நிலையில் நேற்றுக்காலை சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-03)

# வவுனியாவில் உளநல தின நிகழ்வு



வவுனியா, ஒக். 12

உலக உளநல தினத்தை முன்னிட்டு வவுனியா உளநல சங்கத்தின் ஏற்பாட்டில் அபாயங்களிலும் அவசர நிலையிலும் அனைவருக்கும் மனநல சேவைகள் எனும் தொனிப்பொருளில் விசேட நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா மாநகர சபை திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வரோட் நிறுவன மாணவ, மாணவிகளால் கலை நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன.

மேலும், உலக உளநல தினத்தை முன்னிட்டு பயனாளிகளின் பிள்ளைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட வினாடி வினா, கட்டுரை, ஓவியம் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற 25 மாணவர்களுக்கு வெற்றிக் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா மாநகர சபை முதல்வர் சு. காண்டீபன், வவுனியா மருத்துவமனை பணிப்பாளர் செந்தூர் பதிராஜா, உளநல மருத்துவ நிபுணர் மதுசி செனவிரத்ன, வவுனியா பொது மருத்துவமனையின் உளநல மருத்துவர் சி. சுதாகரன் மற்றும் மருத்துவர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், வரோட் நிறுவன உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(எ-10)

# நீச்சல் குளத்தில் சிறுவன் மரணம் ஏழு பேர் கைது

கொழும்பு, ஒக். 12

நுகேகொடையில் உள்ள ஒரு ஹோட்டலில் நீச்சல் குளத்தில் 5 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் குறித்த சிறுவன் படித்து வந்த பாலர் பாடசாலையின் உப அதிபர் உட்பட 7 பேரை மிரிஹான பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த 8 ஆம் திகதி காலை மிரிஹான, ஸ்டான்லி மாவத்தையில் உள்ள ஒரு ஹோட்டலில் பதிவானது.

குறித்த தினத்தன்று இறந்த சிறுவன் பயிற்சியாளரின் வழிகாட்டுதலின் கீழ் ஹோட்டலில் நீச்சல் குளத்தில் நீந்திக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கினார்.

இதில் சிறுவனுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு களுபோவில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிறுவன் இறந்துவிட்டதாக விசாரணையில் தெரியவந்தது.

சிறுவனின் சடலம் மீதான பிரேத பரிசோதனை நடைபெற்ற நிலையில், சம்பவம் தொடர்பில் பாலர் பாடசாலையின் அதிகாரி, விளையாட்டு ஒருங்கிணைப்பு அதிகாரி, சிறுவர்களுக்குப் பொறுப்பான இரண்டு ஆசிரியர்கள், பாலர் பாடசாலை ஊழியர் மற்றும் இரண்டு நீச்சல் பயிற்றுநர்கள் உட்பட 7 பேரை மிரிஹான பொலிஸார் கைது செய்தனர். (எ)

# "பாடத்திட்டத்தில் சட்டத்தை கட்டாயமாக்க வேண்டும்"

கொழும்பு, ஒக். 12

அடிப்படை சட்டத்தை அறியாமல் இருப்பதும் பல பிரச்சனைகளுக்கும் மோதல்களுக்கும் பிரதான காரணியாக உள்ளது. இலங்கையின் எதிர்கால தலைமுறையினரின் நலனை கருத்தில் கொண்டு பாடத்திட்டத்தில் குடியுரிமை என்ற பாடத்தை சட்டம் மற்றும் குடியுரிமை கல்வி என்று பெயர் மாற்றி சட்டத்தை அடிப்படை பாடமாக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ருவன் மாபலகம வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாடசாலைக் கலைத்திட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுக்கவியல் விடயங்களை உள்ளடக்குதல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலவச கல்வி கட்டமைப்பில் 6-11 வரையான தரங்களின் பாடத்திட்டத்தில் சட்டத்தை ஒரு பாடப்பரப்பாக உள்ளடக்க வேண்டும். இதன் முக்கியத்துவத்தை நாட்டு மக்கள் அனைவரும் விளங்கிக்கொண்டுள்ளதால் இந்த தனிநபர் பிரேரணையை முன்வைத்துள்ளேன்.

இலங்கையின் நீதிமன்றங்களில் சட்டத்தை அறியாமல் இருப்பது விடுவிப்புக்கான காரணியாக கருதப்படாது என்ற கொள்கை காணப்படுகிறது. சகல பிரஜைகளும் அடிப்படை சட்டம் குறித்து அடிப்படையான புரிதலை பெற்றிருக்க வேண்டும் என்று நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் துரதிஷ்டவசமாக இது வரையான காலப்பகுதியில் பாடசாலை கல்விக் கட்டமைப்பில் அடிப்படை சட்டம் ஒரு முறையான பாடத்திட்டமாக உள்ளடக்கப்படவில்லை- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முழுவதும் சட்டவிரோத நிதி நிறுவனங்கள் தோற்றம்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் தெரிவிப்பு


கொழும்பு, ஒக். 12

நாடு முழுவதும் ஏராளமான சட்டவிரோத நிதி நிறுவனங்கள் தோற்றம் பெற்று, அப்பாவி மக்களின் பணத்தைச் சுரண்டி வருகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதற்கு மிக அண்மித்த உதாரணமாக கிழக்கு ஹேவாகம் கோரள கூட்டுறவு சங்கம் தமது சேமிப்பு நிதியை இது போன்ற ஒரு நுண் நிதி வங்கியில் வைப்பிலிட்டதனால், கோடிக்கணக்கான ரூபாய் இழக்கப்பட்டு, சுமார் 50,000 வாடிக்கையாளர்களின் வைப்புத்தொகைகளும் இழக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, இணையவழி கடன் மாபியா மூலம், பல்வேறு நபர்கள் வெளிநாடுகளில் இருந்து இந்நாட்டிற்கு வந்து இணைய வழியாக கடன்களை வழங்கி, இறுதியில், மிரட்டல் விடுத்து, அச்சுறுத்தி பணம் பறிக்கும் செயல்முறைகளும் நாட்டில் நடந்து வருகின்றன. மேலும், பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தல்களை மதிக்காமல், வாகனங்களை வலுக்கட்டாயமாக கையகப்படுத்தும் லீசிங் நிறுவனங்களினது செயல்களும் அதிகரித்து காணப்படுகின்றன. இந்த விடயத்தில் அரசாங்கம் அவசரமாக தலையீடு செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவருதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், கல்வித்துறை அதிகாரிகள் மற்றும் கல்வித் துறையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டுள்ளவர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கினர். இருப்பினும், தற்போதைய அரசாங்கம், ஆட்சிக்கு வந்ததன் பிறகு, கல்வித் துறையில் காணப்படும் தொழில்முறை பிரச்னைகளைத் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளை தாமதப்படுத்தி வருவதாகத் தெரிகிறது. பல்கலைக் கழகக் கட்டமைப்பில் பேராசிரியர்கள் விரிவுரையாளர்களின் பற்றாக்குறை காணப்படுவது பெரும் பிரச்னையாகும். ஒவ்வொரு 3 கிலோ மீற்றருக்கும் பாடசாலைகளை நிர்மாணிப்போம் என்று தேர்தல் மேடைகளில் கூறிய தற்போதைய அரசாங்கம், இப்போது குறைவான மாணவர்களை கொண்ட பாடசாலைகளை மூடுவதற்குத் தயாராகி வருகின்றது. பாடசாலையொன்றை மூடுவது என்பது சிறைச்சாலையொன்றைத் திறப்பதற்கு சமமான செயலாகும். அவ்வாறே, ஆசிரியர்களாக பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரச்னையும் காணப்படுகின்றது.- என்றார். (எ)



# வவுனியா வேப்பங்குளத்தில் அரச ஊழியர்கள் போராட்டம்

வவுனியா, ஒக். 12

வவுனியா, ஓமந்தை வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத் திட்டத்துக்கு செல்லும் வீதியால் கனரக வாகனங்கள் பயணிப்பதால் வீதி சேதம் அடைவதாக தெரிவித்து நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள கருங்கற் குவாரி ஒன்றிலிருந்து தினமும் 60இற்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்கள் சென்று வருவதனால் சிறிய வீதியாக உள்ள குறித்த வீதி தற்போது சேதமடைந்து மக்கள் பாவனைக்கு உதவாத வகையில் மாற்றமடைந்து இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறித்த வீதியின் ஊடாக கனரக வாகனங்கள் செல்வதை அனுமதிக்க வேண்டாம் எனவும் விபத்துகளுக்கு உள்ளாகுவதாகவும் தெரிவித்து கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓமந்தை வேப்பங்குளம், விளாத்திக்குளம் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் வீதியை ஊடறுத்து செல்லும் ரயில் பாதையில் பாதுகாப்பு கடவையின்மை மற்றும் ரயில் வரும்போது சமிக்ஞைகள் இல்லை எனவும் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த பகுதிக்கு வருகை தந்த வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம், கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்களோடு கலந்துரையாடியதோடு இது தொடர்பில் பாராளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சரோடு கலந்துரையாடுவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினரிடம் ஜனாதிபதிக்கு கையளிக்கும் வகையில் மகஜர் ஒன்றும் வழங்கப்பட்டது.

இங்கு வருகை தந்த ஓமந்தை பொலிஸார், போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களோடு கலந்துரையாடியதுடன் பிரதேச சபை தவிசாளர், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், கற்குவாரியின் உரிமையாளர்களை அழைத்து இது தொடர்பில் ஒரு முடிவை எட்டுவதாக தெரிவித்தனர்.

இதன்பின்னர் போராட்டம் கைவிடப்பட்டதோடு பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம், கற்குவாரியை பார்வையிட்டிருந்தார். (எ-10)

# உளநல தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடைபவனி



மட்டக்களப்பு, ஒக். 12

உலக உளநல தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு, செட்டிப்பாளையம் பிரதேச மருத்துவமனையின் ஏற்பாட்டில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடைபவனி ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

செட்டிப்பாளையம் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பதிகாரி சி. ஜீவிதா தலைமையில் நடைபெற்ற இந்த நடைபவனியில் பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மருத்துவமனை உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், மருத்துவமனை நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ)

# மின்சார கட்டணம் குறித்து இறுதி முடிவு 14ஆம் திகதி

கொழும்பு, ஒக். 12

மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பான இறுதி முடிவு இம்மாதம் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்படும் என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணத்தை 6.8 சதவீதமாக உயர்த்த இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளதாக அதன் பணிப்பாளர் ஜெயநாத் ஹேரத் கூறினார்.

மறுசீரமைப்பு திட்டங்களை அதிகாரிகள் முறையாக செயல்படுத்தத் தவறியதால் கட்டண உயர்வு தேவைப்படுவதாக மின்சார சபையின் தொழில்நுட்ப பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் சங்கத்தின் பிரதித் தலைவர் நந்தன உதய குமார தெரிவித்தார்.

மேலும், தற்போது 1. 5 மில்லியன் ரூபாயாக உள்ள பணிப்பாளர் சபைக் கட்டணம், மின்சார சபையைப் பிரிப்பதன் மூலம் சுமார் ஒரு கோடி ரூபாயாக உயரும் என்று மின்சார பயனாளிகள் சங்கத்தின் தலைவர் எம்.டி.ஆர். அதுல கூறினார். (எ)

# பொலிஸ் அனுமதி விண்ணப்பம்: இணையவழி முறை செயலிழப்பு

கொழும்பு, ஒக். 12

பொலிஸ் அனுமதி விண்ணப்பத்துக்கான இணையவழி முறை தொழில்நுட்ப கோளாறு காரணமாக செயலிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் அனுமதிக்கான விண்ணப்பங்கள் இணையவழி முறை மூலம் மட்டுமே விண்ணப்பிக்கப்படுகின்றன.

இணையவழி முறை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக செயலிழந்துள்ளது.

இந்த செயலிழப்பை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதுடன், விண்ணப்பதாரர்களுக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு பொலிஸ் தலைமையகம் வருத்தம் தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப கோளாறு சரிசெய்யப்பட்டவுடன் மீண்டும் அறிவிக்கப்படும் என பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# ‘தொட்டலங்க கண்ணா’ வுக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

கொழும்பு, ஒக். 12

39 கிராம் ஹெரோயின் வைத்திருந்து கடத்தியதற்காக ‘தொட்டலங்க கண்ணா’ என்ற போதைப்பொருள் கடத்தல்காரருக்கு ஆயுள் தண்டனை விதித்த கொழும்பு மேல் நீதிமன்றம், அவரைக் கைது செய்து உடனடியாக தண்டனையை நிறைவேற்றுமாறு பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள பணிப்பாளருக்கு உத்தரவு பிறப்பித்தது.

நீண்ட விசாரணைக்குப் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுளா திலகரத்ன இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

எலகந்த பகுதியில் 39.99 கிராம் ஹெரோயின் வைத்திருந்து கடத்திய குற்றச்சாட்டின் பேரில், கணபதி கணேஷ் எனப்படும் தொட்டலங்க கண்ணா மீது 2014 டிசெம்பர் 26 ஆம் திகதி சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

விசாரணையின் போது பிணை வழங்கப்பட்ட பிரதிவாதி நீதிமன்றத்தை தவிர்த்து வந்த நிலையில் விசாரணை நடைபெற்று வந்தது.

நீண்ட விசாரணைக்குப் பின்னர் தீர்ப்பை அறிவித்த மேல் நீதிமன்ற நீதிபதி, பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இதன்படி, அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டார். (எ)

# இராணுவ முகாம் அமைந்திருந்த காணி மக்களிடம் கையளிப்பு

காரைதீவு, ஒக். 12

அம்பாறை மாவட்டம், காரைதீவு இராணுவ முகாம் அமைந்திருந்த காணி 35 வருடங்களின் பின்னர் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு முதல் காரைதீவில் 0.5 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்பட்ட இந்த இராணுவ முகாம் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் பாஸ்கரனிடம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

கடந்த 35 வருடங்களுக்கு முன்பு குறித்த பகுதியில் காரைதீவு பிரதேச சபையும் பொது நூலகமும் இயங்கின.

இதேவேளை, இராணுவ முகாம் அமைந்திருந்த காணியுடன் தனியார் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இராணுவ முகாம்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் எடுத்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ளது.

இந்த முகாமை அகற்றி பிரதேச சபை, பொது நூலக கட்டடத்தை மீள ஒப்படைக்குமாறு கடந்த காலத்தில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் குரல் எழுப்பி வந்தனர்.

இந்த நிலையில் முதற் கட்டமாக இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ளதுடன் இம் மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள மேலும் ஒரு சில இராணுவ முகாம்கள் கட்டம் கட்டமாக அகற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காரைதீவில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் கல்முனை முகாம் நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றனர். (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
12.10.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், புரட்டாதி 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இது வடக்கின் மீதான பாராமுகமா?

வடக்கு மாகாண அபிவிருத்தியில் அரசாங்கம் உண்மையிலேயே அக்கறை கொண்டிருக்கின்றதா என்னும் பலமான சந்தேகம் எழுந்திருக்கின்றது. அண்மையில் இந்த விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில விடயங்களை மிகவும் சரியாகவே சுட்டிக்காட்டியிருந்தார். பலாலி விமான ஓடுதளத்தை புனரமைப்பதை இழுத்தடித்துவரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இரத்மலானை விமானத் தளத்தை புனரமைப்பதற்கான பெரும் தொகை நிதியை ஒதுக்கியிருக்கின்றது. ஏன் இந்த நிலைமை?

வடக்கு தமிழ் மக்கள் தங்களுக்கு ஆணை வழங்கியிருப்பதாக கூறிக்கொள்ளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அந்த ஆணைக்கு அமைவாக ஏன் செயல்பட மறுக்கின்றது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுவது போன்று, வடக்கு மாகாண மக்களின் ஆதரவை இனிப் பெற முடியாதென்று கருதுவதால்தான் வடக்கு மாகாண அபிவிருத்தில் ஆர்வமற்றிருக்கின்றதா. தென்னிலங்கை வாக்குகளுக்காக மட்டும் பணியாற்றுகின்றதா?

தமிழ் அரசியல்வாதிகள் தவறாக பேசுகின்றனர் என்று கூறிக்கொண்டிருப்பதன் மூலம் மட்டும் வடக்கு மக்களை திருப்திப்படுத்துவிட முடியுமென்று அரசாங்கம் கருதுகின்றதா? தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில்தான் வடக்கு மாகாணம் அபிவிருத்தியடையும் என்று அண்மையில் வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டிருந்தார்? எவ்வாறான அபிவிருத்தி? வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியானது இந்தியாவிற்கும் வடக்கு மாகாணத்திற்குமான இணைப்பில்தான் தங்கியிருக்கின்றது. அந்த இணைப்பை விரைவுபடுத்தாமல் வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யலாம் என்பது வெறும் வார்த்தையாகவே இருக்க முடியும்.

இந்தியாவிற்கும் இலங்கைக்குமான இணைப்பு விடயத்தில் ஜே.வி.பி அச்சப்படுகின்றதா அல்லது வடக்கு மாகாண அபிவிருத்தியை குறிப்பாக வடக்கு, கிழக்கின் தமிழ் பகுதிகளை அபிவிருத்தி செய்வதை விரும்பவில்லையா - முன்னைய ஆட்சியாளர்கள் போன்று விடயங்களை இழுத்தடித்து, விடயங்கள் மீதான நாட்டத்தை இல்லாமலாக்க முயற்சிக்கின்றதா?

பலாலி விமான ஓடுதளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம்தான் புலம்பெயர் சமூகம் மற்றும் தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும் வடக்கு மாகாணத்திற்குமான ஊடாட்டம் வலுவடையும். தற்போது கொழும்பு விமான நிலையத்தின் ஊடாக பயணம் செய்யும் தமிழ் மக்கள் தமிழ் நாட்டின் வழியாக நேரடியாக வடக்கு மாகாணத்திற்குள் நுழைவர். இதன் மூலம் ஒரே நேரத்தில் இரண்டு விடயங்கள் நிகழ்கின்றன.

தமிழ் நாட்டோடும் சமூக பொருளாதாரத் தொடர்புகள் வலுவடையும் அதேவேளை, வடக்கு மாகாணத்துடன் நேரடியான ஊடாட்டம் ஏற்படும். இந்த விடயங்களை கணித்துத்தான் அரசாங்கம் விடயங்களை இழுத்தடிக்க முயற்சிக்கின்றதா? காங்கேசன் துறைமுகத்தை புனரமைப்பதிலும் அரசாங்கம் தொடர்ந்தும் சாட்டுக்களையே கூறிவருகின்றது. இந்தியா நிதியை கொடையாக வழங்குவதற்கு இணங்கியபோதிலும் கூட, அரசாங்கமோ திட்டமிட்டு, துறைமுக அபிவிருத்தியை பிற்போட்டு வருகின்றது. பிற்போடுவதற்கான காரணங்களை கூறுவதிலேயே கவனம் செலுத்துகின்றது. ஒன்றில் ஜே.வி.பி. அரசாங்கம் அதன் முன்னைய இந்திய அச்சத்தினால் தடுமாறுகின்றது அல்லது வடக்கு மாகாண அவிருத்திக்கான கதவை மிகவும் தந்திரமாக அடைக்க முயற்சிக்கின்றது. வடக்கு கிழக்கு மாகாணத்தின் தமிழர் பகுதியின் அபிவிருத்தி தொடர்பில் முதலில் தமிழ் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் அனைத்தும் ஒரு தெளிவான வழிவரைபடத்தை தயாரிக்க வேண்டும். அப்போதுதான் இந்த விடயங்களிலுள்ள பாராமுகத்தை ஆதாரபூர்வமாகவும் தர்க்க ரீதியாகவும் எதிர்கொள்ள முடியும்.

# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு விரைவில் அரசால் அமைக்கப்படும்!

**அமைச்சர் விஜித ஹேரத்**

கொழும்பு, ஒக். 12

“உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்குரிய சட்டமூலம் வெகு விரைவில் நிறைவேற்றப்படும். குறித்த ஆணைக்குழுவின் பணியும் விரைவில் ஆரம்பமாகும்.” - என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

2009 இல் போர் முடிவடைந்து ஒரு வாரம் சென்ற பின்னர் உண்மை மற்றும் நல்லிணக்கு ஆணைக்குழுவை அமைக்குமாறு ஜே.வி.பியினராகிய நாம் பரிந்துரை முன்வைத்தோம். இதற்கமைய ஆணைக்குழு அமைத்து, அவற்றின் பரிந்துரைகளை அமுலாக்கி இருந்தால் ஜெனிவா தீர்மானம் என ஒன்று வந்திருக்காது. இன்று அது பற்றி கதைக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்காது.

எனவே, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, ஆணைக்குழுவின் பணியை முன்னெடுப்பதற்கு இடமளிக்கப்படும்.அதேபோல சுயாதீன வழக்கறிஞர் அலுவலகமொன்றும் ஸ்தாபிக்கப்படும்.

போரை முடிவுக்கு கொண்டுவந்த படையினர் மற்றும் வேறு எந்தவொரு இன குழுமத்தையும் இலக்கு வைத்து நாம் இதற்குரிய நடவடிக்கையை முன்னெடுக்கவில்லை என்பதை தெளிவாக கூறி வைக்க விரும்புகின்றோம். நல்லிணக்கம், மனித உரிமை பாதுகாப்பு, மீள்நிகழாமை போன்ற சூழ்நிலையை உருவாக்குவது எமது பொறுப்பாகும்.

அதேவேளை, பயங்கரவாத தடைச்சட்டம் வெகுவிரைவில் நீக்கப்படும். சர்வதேச நியமனங்கள் மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் பயங்கரவாதத்தக்கு எதிரான புதிய சட்டம் வரும். நிகழ்நிலை காப்பு சட்டமும் மறுசீரமைக்கப்படும்-என்றார். (அ)

# தொற்றாநோய் கட்டுப்பாடு, சிகிச்சை, மனநலம் ஊட்டச்சத்துத் துறைகளில் பிரத்தியேக கவனம்!

**சுகாதார அமைச்சர் நளிந்த**

கொழும்பு, ஒக். 12

ஆரோக்கியமான நாட்டுக்காக அடுத்த பத்து ஆண்டுகளுக்கு அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் கொள்கை வரைவு தயாரிக்கப்பட்டு தொற்றா நோய் கட்டுப்பாடு, சிகிச்சை மற்றும் மனநலம் மற்றும் ஊட்டச்சத்து ஆகிய துறைகளுக்கு பிரத்தியேக கவனம் செலுத்தப்படும் என சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவையில் 294 புதிய தாதியர்கள், 9 பேச்சு பயிற்சியாளர்கள் மற்றும் 6 மருந்தாளர்களை உள்வாங்குவதற்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் அரச கொள்கைக்கு ஏற்ப தற்போது ஒரு சுகாதாரக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.

பத்து ஆண்டுகளை நிறைவு செய்த பிறகு, அடுத்த பத்து ஆண்டுகளுக்கு ஏற்ப அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய வகையில் நாட்டிற்காக இந்த சுகாதாரக் கொள்கை வரைவு செய்யப்படும்.

தொற்றா நோய் கட்டுப்பாடு, சிகிச்சை, மனநலம், ஊட்டச்சத்து போன்ற துறைகளுக்கு அதிக கவனம் செலுத்தப்படும். தற்போதைய அரசாங்கம் சுகாதார சேவைக்குத் தேவையான அனைத்து நிதிகளையும் எந்தப் பற்றாக்குறையும் இல்லாமல் வழங்கும். கடந்த மார்ச் மாத பாதீட்டில் 604 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது. எதிர்வரும் பாதீட்டில் சுகாதாரத் துறைக்கு கூடுதல் பணம் ஒதுக்கப்படும். நாட்டின் சுகாதார சேவைக்கு கணிசமான எண்ணிக்கையிலான தாதிய அதிகாரிகள் மற்றும் தாதியர்கள் தேவை. 875 பட்டதாரிகளை பணியமர்த்த ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அவர்களுக்கான ஆறு மாத கால பயிற்சி மற்றும் ஒருங்கிணைப்பு பயிற்சி இந்த மாதம் தொடங்கும். வரும் ஏப்ரல் மாதத்திற்குள் கிட்டத்தட்ட 800 பேர் தாதியர்கள் அதிகாரிகளாக நியமிக்கப்படுவார்கள் - என்றார்.

(அ)

# கொழும்பு துறைமுகம் மூலம் 3,220 கோடி ரூபாய் இலாபம்!

கொழும்பு, ஒக். 12


கொழும்பு துறைமுகம் இந்த ஆண்டின் முதல் 8 மாதங்களில் சுமார் 3 ஆயிரத்து 220 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியுள்ளது என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. இது, 71 சதவீத வளர்ச்சி என்றும் அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டில் முதல் 8 மாதங்களில், ஆயிரத்து 890 கோடி ரூபாய் இலாபம் ஈட்டப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு முனையம், ஜய கொள்கலன் முனையம் போன்றவற்றின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததன் மூலம் எதிர்காலத்தில் திறனை மேலும் அதிகரிப்பதற்கு நம்புவதாக இலங்கை துறைமுக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பை விதைத்தால் ஆயுள் அதிகரிக்கும்!

இரா. சாந்தகுமார்



ஜப்பானில் ஆண்டுதோறும் நூறு வயதுக்கும் மேற்பட்ட முதியோர்களைக் கணக்கெடுத்து அவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தை அந்த நாட்டு அரசு பல ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வருகிறது.

அந்த நாட்டில் 1963-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் 153 நபர்கள் நூறு வயதுக்கும் மேற்பட்டவர்களாக இருந்த நிலையில், அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் இந்த எண்ணிக்கை ஒரு லட்சமாக உயர்ந்துள்ளது. நூறு வயதைக் கடந்தவர்களில் 88 வீதம் பேர் பெண்கள் ஆவர்.

1950-ஆம் ஆண்டில் உலகில் 47-48 ஆண்டுகள் மனிதர்களின் சராசரி ஆயுள் காலமாக இருந்தது. மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக தற்போது அது 73 ஆண்டுகளாக அதிகரித்துள்ளது. உலக அளவில் 100 வயதைக் கடந்த முதியவர்கள் வாழும் நாடுகளில் முதல் மூன்று இடங்களில் ஜப்பான், அமெரிக்கா, சீனா ஆகியவை உள்ளன. நான்காவது இடத்தை இந்தியா (37,988 நபர்கள்) பெற்றுள்ளது. சுமார் 147 கோடி மக்கள்தொகை கொண்ட இந்தியாவில் இது மிக மிக சொற்ப எண்ணிக்கையே.

உலகில் மனிதர்கள் சராசரி ஆயுள் காலத்துக்கும் மேலாக ஆரோக்கியத்துடன் வாழும் நிலப் பரப்புகள் நீல மண்டலங்கள் என அழைக்கப்படுகின்றன. ஒகினாவா (ஜப்பான்), சர்டினியா (இத்தாலி), லோமாலிண்டா (கலிபோர்னியா), நிக்கோயா (கோஸ்டாரிகா) மற்றும் இகாரியா (கிரீஸ்) ஆகியவை தற்போதைய நீல மண்டலப் பகுதிகளாகும். இதுபோன்ற பகுதிகளின் எண்ணிக்கை பன்மடங்கு பெருக வேண்டும்.

நீண்ட காலம் உடல் ஆரோக்கியத்துடன் வாழும் ஜப்பானியர்கள் மிகக் கடின உழைப்பாளிகளாக உள்ளனர். தங்கள் உணவில் மீன், காய்கறிகளுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறார்கள்.

இவர்களின் உணவில் உப்பு, சர்க்கரையின் பயன்பாடு மிகக் குறைவே. உணவு உண்ணும் போது இயன்றவரை குடும்பத்தாருடன் தரையில் அமர்ந்து உண்பது, உணவு உண்பதற்கு நீண்ட நேரம் எடுத்துக் கொள்கின்றனர். உண்ணும் போது கைப்பேசி, தொலைக்காட்சி ஆகியவற்றால் உண்டாகும் கவனச் சிதறல்களைத் தவிர்ப்பது ஜப்பானியர்களின் பழக்கமாகும்.

தற்போதும் அருகிலுள்ள ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்களுக்குச் செல்ல நடந்து செல்வதற்கும், மிதிவண்டியில் செல்வதற்கும் முன்னுரிமை தருகின்றனர்.

முதியோரை முதியோர் இல்லங்களில் சேர்க்காமல் தங்களோடு வைத்து பராமரிக்கும் ஜப்பானியரின் குடும்ப முறையும் அந்நாட்டில் முதியோர் நீண்ட காலம் வாழ உதவுகிறது. ஜப்பான் நாட்டின் மாசு குறைந்த சூழல் ஜப்பானியரின் நீண்ட ஆயுளுக்கு உதவும் காரணிகளில் ஒன்றாக விளங்குகிறது. இவற்றுக்கும் மேலாக, நீண்ட ஆயுளுக்கும் பக்கவாதம், மாரடைப்பு, இதய நோய் போன்ற நோய்கள் வராமல் தடுக்கும் டிஎன்ஏ 5178 மற்றும் என்2-237மெட் ஆகியன இயல்பாகவே ஜப்பானியர்கள் ரத்தத்தில் சற்றே மிகுந்திருப்பது அவர்களுக்கு இயற்கை தந்த வரம் ஆகும்.

அவசர கதியே வாழ்க்கை என்று அமைந்துவிட்ட சூழலில், நம்மில் பலர் வாய் விட்டு சிரிப்பதையே மறந்து விட்டோம் என்பதே எதார்த்தம் "நிற்கவும் நேரமில்லை..", "ஓடிக்கொண்டே இருக்கிறேன்..." எனக் கூறியபடி எப்போதும் பரபரப்பாக வாழ்வோர் ஒருபுறம். கைப்பேசி பயன்பாட்டில், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மூழ்கி நேரத்தை வீணடிப்போர் மறுபுறம். இவ்விரு தரப்பினருமே ஆயுள் வளர்த்து அதிக ஆண்டுகள் வாழ்வதில் போதிய கவனம் செலுத்துவதில்லை.

60 வயதைக் கடந்த முதியோரில் பலர் பணத் தேவைக்கான நிர்ப்பந்தம் இருந்தாலன்றி உழைப்பதற்கும், தங்களைச் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வதற்கும் முன்வருவதில்லை. குறிப்பாக, அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றோரில் பெரும்பாலானோர் மீண்டும் தங்களுக்கு உகந்த பணியைத் தேர்ந்தெடுத்து உழைக்க முன்வருவதில்லை. உடலுழைப்பில்லா இத்தகையவர்களே நாளடைவில் அதிகப்படியான முதுமையடைந்து முதுமைக் கால நோய்களால் துன்பப்படுகிறார்கள்.

ஆயுள் வளர்க்கும் அரிய வழிகளில், முதுமைக் காலத்தில் நிறைவேற்றிக் கொள்ளத்தக்க ஆசைகளை அதற்கான வாய்ப்புகள் இருக்கும்போதே நிறைவேற்றிக் கொள்வதும் ஒன்றாகும். இவ்வாறு முதுமையில் நிறைவேற்றப்படும் ஆசைகளால் மனதில் ஏற்படும் மகிழ்ச்சியின் தாக்கம் உடல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்த வல்லது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# இந்தவார ராசிபலன் 12.10.2025 - 18.10.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 26
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சஷ்டி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் அரசு வகை ஆதாயம் ஏற்படும். வங்கிகள் மூலம் கிடைக்கும் உதவிகள் தாமதப்பட்டாலும், புதிதாக தொழில் தொடங்கி ஆதாயம் காண முற்படுவீர்கள். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் வளர்ச்சி மற்றும் நல்ல முன்னேற்றத்துக்காக கடுமையாக உழைக்க வேண்டிய காலம் இது. சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் நெடுநாட்களாக பெண் தேடி அலைந்தவர்களுக்குத் திருமணம் உறுதியாகி, அதன் காரணமாக மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதப்பார்கள். நீண்ட நாள் கனவுகள் நனவாகும். வாலிபர்கள் தோழர், தோழிகளுடன் பொதுச்சேவைகளில் ஈடுபடுவர். புதிய வாகனத்தை வாங்கும் முயற்சிகளைத் தள்ளிப் போடுவது நல்லது. நீங்கள் காட்டும் உண்மையான அன்பு கண்டு உறவுகள் மகிழ்ச்சி கொள்வார். பணியிடத்தில் ஏற்படும் பிரச்சனைகளை சமாளித்து விடுவீர்கள்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பிறகு, பணவரவு அதிகரிப்பதால், மனதில் மகிழ்ச்சி பொங்கும். சிலருக்குப், பேரின்பம் பெறும் விதமாக மனைவிக்கு குழந்தை பேறு உண்டாகி இருக்கும் சேதி கேட்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதப்பீர்கள். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு கை செலவுகளைக் குறைத்து சேமிப்புகளை அதிகரிப்பது நல்லது. நீங் கள் ஆற்றிய பொதுச் சேவை காரணமாக மக்கள் மத்தியில் புகழ் பெறுவீர்கள்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் சிலருக்கு ஆன்மிகப் பெரியவர்கள் அறிவுரைகள் கிடைத்து, வாழ்க்கைக்கான வழிகாட்டுதல்களும் கிடைக்கும். சுற்றமும் நட்பும் சூழ சொகுசு வாகனத்தில் உல்லாச சுற்றுலா பயணங்கள் சென்றது கனவு போல் தோன்றும். தற்போது பயணங்கள் செல்வதே சிரமமாக இருக்கும். வீட்டில் பொருட்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள். குடும்பத்தினரிடையே கருத்து வேறுபாடுகளை தவிர்க்க, அனுசரித்துச் செல்வது நல்லது.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

மகம் - இந்த வாரம் மனோதைரியம் ஓங்கும். பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும், சிலருக்கு நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். தந்தையின் உறவுகள் மூலம் வேண்டிய உதவிகள் கிடைக்கும். விளையாட்டுத் தனங்களை ஒதுக்கி விவேகத்துடன் நடப்பது நல்லது. சிலருக்குப் பணியில், விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு, ஓரளவு பணவரவு ஏற்படும். வெளியூர் பயணங்களை ஒத்திப் போடுங்கள். வீட்டில் தாமதப்பட்ட சுபகாரியங்கள் ஏற்பட்டு, செலவுகள் அதிகரிக்கும். அதிக உழைப்பிற்குப் பிறகு எடுத்த காரியங்கள் ஈடேறும். அதன் மூலம் பணவரவு மற்றும் இலாபங்கள் பெருகும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தான தருமங்கள் செய்வார்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. சில மாணவர்கள் கடின உழைப்பால், கல்வியில் உயர்நிலை எய்துவர். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் குடும்பத்தில் சுகமும் ஆரோக்கியமும் பெருகும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்ப டும். சிலருக்குத் தங்கள் விருப்பம் போல் உயர்ரக வாகனங்கள் கிடைக் கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், நட்பும் கிடைக்கும். தந் தைக்கு நன்மைகள் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு உயர் பதவிகள் கிடைக்கும். பல புண் ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்புகள் தள்ளிப் போகலாம்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் அனைத்து வசதிகளும் அதிகரித்து ஆனந்தம் பெருகும். வீட்டில் ஏற்படும் புதிய வசதிகள் மூலம் மனம் மகிழும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை வாங்குவீர்கள். ஆரவாரம் மிக்க சூழலில், கேளிக்கை விருந்து கள் மற்றும் பெண் களின் அருகாமை ஆனந்தமளிக்கும். நல்ல பண்பாளர்களின் தொடர்புகள் வாழ்க்கை யில் நல்ல முன்னேற்றங்களை அடைவீர்கள். தெய்வ சிந்தனையால் மனநிம்மதி கூடும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பக்தி சொற்பொழிவுகள், பாடல்கள் கேட்பதில் ஆர் வம் எழும். எதிர்பாராத தனவரவு, புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச் சிகள் ஆகியவை ஏற்படும். தொழிலில் புதிய விரிவாக்கங்கள் செய்வ தால் எதிர்பாராத அளவுக்கு அசாத்திய வளர்ச்சி ஏற்படும். மேலதிகா ரிகளின் உதவி மற்றும் அனுகூல தால் உயர் பதவிக்கான சிபாரிசுகள் மேற்கொள்ளப்படும். புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். மனதில் மகிழ்ச்சி பொங்கும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் உங்கள் சம்பாதிக்கும் திறன் மேம்படும். கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான செய்தியை பெறுவர். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஓய்வெடுக்கும் விதமாக நமக்கு எல்லா நாட்களும் ஞாயிறாக இருப்பதில்லை. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. வெற்றியின் மகிழ்ச்சி அனுபவிப்பீர்கள்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் அனைத்து முக்கிய காரியங்களிலும் எறும்பை ஒத்த சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். புதிய வாகன வசதிகள் மேம்படும். சிலருக்கு அதிகாரப் பதவியும், அமைச்சர் போன்ற பதவிகளும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். பக்தி மார்க்கத்தில் தீவிர ஈடுபாடு உண்டாகும். சுபகாரிய நிகழ்ச்சிகள் இல் லத்தில் மகிழ்ச்சி பொங்கும். புதிய வசதி வாய்ப்புகள் உருவாகும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் அதிக லாபம் கிடைக்கும். எச்சரிக்கை தேவை.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வார எதிர்பார்ப்புக்கு மேல் தாராளமான தனவரவு ஏற்படும். தத்துவ உபதேசங்கள், பக்திச் சொற்பொழிவு கேட்பதில் ஆர்வம் ஏற்படும். அதன் காரணமாக மனதில் மிகுந்த உற்சாகம் அமைதியும் பெருகும். நவநாகரீக ஆடைகள், ருசியான உணவு வகைகள் ஆகியவை கிட்டும். தொட்டில் ஆட்டிக் கொஞ்சி மகிழ, புத்திர பாக்கியம் ஏற்படும். சினத்தை அடக்கினால் சிக்கல்கள் தீரும். செலவுகள் அதிகமாக புதிய கடன்களை வாங்க வேண்டிய சூழ்நிலை எழும். தீய குணம் உள்ளவர்கள் பயம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மாகாணசபை தேர்தல்கள்: குழப்பகரமான அறிவிப்புகளைச் செய்யும் அரசாங்கம்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

மாகாணசபை தேர்தல்கள் அடுத்த வருடம் நடத்தப்படும் என்று அரசாங்க தலைவர்கள் அண்மைக் காலமாக செய்துவரும் அறிவிப்புக்கள் தேர்தல்கள் நிச்சயமாக நடத்தப்படும் என்ற நம்பிக்கையை தருவதிலும் பார்க்க சந்தேகத்தை வலுப்படுத்துபவையாகவே அமைந்திருக்கின்றன.

நீண்டகாலமாக தாமதிக்கப்படும் மாகாணசபை தேர்தல்களை அடுத்த வருடத்திற்குள் நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது என்றும் தற்போதைய எல்லை நிர்ணயச் செயன்முறை நிறைவடைந்தவுடன் தேர்தல்கள் குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் கடந்த வியாழக்கிழமை (9) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

"மாகாணசபை தேர்தல்களை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடத்துவதா அல்லது கலப்பு தேர்தல் முறையின் கீழ் நடத்துவதா என்பதை நாம் பிறகு தீர்மானிப்போம். இதை பாராளுமன்றமே தீர்மானிக்க முடியும். தேர்தல் முறை குறித்து தீர்மானிப்பதற்கு பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்" என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் இராசமாணிக்கமும் ஜீவன் தொண்டமானும் கிளப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போது அவர் கூறினார்.

அண்மையில் முடிவடைந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 வது கூட்டத் தொடரில் உரையாற்றிய வேளையிலும் அதற்கு முன்னதாக இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் சமர்ப்பித்த அறிக்கைக்கு பதிலளித்த வேளையிலும் விஜித ஹேரத் மாகாணசபை தேர்தல்கள் தொடர்பான அரசாங்கத்தின் இதே நிலைப்பாட்டை தெரிவித்திருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

ஆளும் தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) பலம் பொருந்திய பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களான சபை முதல்வரும் அமைச்சருமான பிமால் இரத்நாயக்க மற்றும் அமைச்சரவைப் பேச்சாளர் நாளிந்த ஜயதிஸ்ஸ போன்றவர்களும் எல்லைநிர்ணயச் செயன்முறை நிறைவடைந்தவுடன் அடுத்த வருடம் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படும் என்று கூறினார்கள்.


விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையையும் பழைய தொகுதி அடிப்படையிலான முறையையும் உள்ளடக்கிய கலப்பு தேர்தல் முறையில் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதாக இருந்தால் மாத்திரமே எல்லை நிர்ணயச் செயன்முறை நிறைவடையும் வரை காத்திருக்க வேண்டியிருக்கும்.

மாகாணசபை தேர்தல்களுக்கான புதிய எல்லை நிர்ணயக் குழுவொன்றை அமைப்பது தொடர்பில் தங்களுக்கு எந்த அறிவுறுத்தலும் கிடைக்கவில்லை என்றும் அந்த செயன்முறை எப்போது முன்னெடுக்கப்படும் என்பது தொடர்பில் தெளிவான தீர்மானம் ஒன்று இல்லாத நிலையில் மாகாணசபை தேர்தல்களுக்கான காத்திருப்பு தொடருகிறது என்றும் சில தினங்களுக்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். இரத்நாயக்க ஊடகங்களுக்கு கூறியிருந்தார்.

முன்னைய குழுக்களின் அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்கும் மாகாணசபை தேர்தல்கள் தொடர்பில் வழிகாட்டல்களை வழங்குவதற்கும் புதியதொரு எல்லை நிர்ணயக் குழுவை நியமிப்பதற்கு ஆகஸ்ட் மாத முற்பகுதியில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. ஆனால், எல்லை நிர்ணயச் செயன்முறை நிறைவடைந்தவுடன் தேர்தல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று முன்னதாக உறுதிமொழிகள் வழங்கப்பட்ட போதிலும், அந்த செயன்முறைகளின் முன்னேற்றம் குறித்து பிந்திய தகவல் எதுவும் அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை.

உள்ளூராட்சி தேர்தல்களைப் போன்று மாகாணசபை தேர்தல்களையும் கலப்பு முறையின் கீழ் நடத்துவதற்காக 'நல்லாட்சி' அரசாங்க காலத்தில் 2017 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட புதிய சட்டத்தின் கீழ் மாகாணங்களில் 2022 தேர்தல் வட்டாரங்களையும் 222 பட்டியல் அடிப்படையிலான ஆசனங்களையும் நிர்ணயம் செய்வதற்காக கலாநிதி கே. தவலிங்கம் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஆனால், அந்த குழு அதற்கான காலஅவகாசம் கடந்த நிலையில் 2018 ஆம் ஆண்டில் சமர்ப்பித்த அறிக்கையை அன்றைய அமைச்சரவை நிராகரித்தது.

அவ்வாறு எல்லை நிர்ணயக்குழுவின் அறிக்கை நிராகரிக்கப்படும் பட்சத்தில், பிரதமர் தலைமையிலான குழு ஒன்று அதை மீள்பரிசீலனை செய்து இரு மாதங்களுக்குள் புதிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்கு சட்டத்தில் ஏற்பாடு இருக்கிறது. அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு இரு மாதங்களில் எல்லை நிர்ணயக்குழுவின் அறிக்கையை முழுமையாக மீள்பரிசீலனை செய்வது சாத்தியமில்லை என்று ஒரு அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது என்று கூறப்படுகிறது. அதற்கு பிறகு புதிய மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படாமல் 11 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்டது. அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தின் கீழ் இறுதியாக 2014 ஆம் ஆண்டில் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



**தென்னிலங்கையில் மாகாணசபை தேர்தல்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் இவ்வாறாக அரசாங்கத்திடம் கோரிக்கையை முன்வைத்துவரும் நிலையில், வடக்கு, கிழக்கில் தமிழ் அரசியல் கட்சிகள் இது விடயத்தில் அரசாங்கத்துக்கு நெருக்குதல்களை கொடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய்வதில் பெரிதாக அக்கறை காட்டாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானது.**

புதிய அரசாங்கம் பதவியேற்று ஒரு வருட காலத்திற்குள் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படும் என்று கடந்த வருட தேசிய தேர்தல்களின் போது தேசிய மக்கள் சக்தி வாக்குறுதி வழங்கியது. அந்த ஒரு வருடம் நிறைவு பெறுவதற்கு இன்னமும் இரு மாதமே இருக்கிறது. உள்ளூராட்சி தேர்தல்களில் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் வாக்குகளில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டதை அடுத்து மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். அடுத்த வருட முதல் அரைப்பகுதியில் அந்த தேர்தல்கள் நடத்தப்படும் என்று அரசாங்கத்தின் சில தலைவர்கள் ஏற்கெனவே கூறியிருந்த நிலையில், தற்போது வெளியுறவு அமைச்சர் அடுத்த வருடத்திற்குள் தேர்தல்கள் நடத்தப்படும் என்று கூறியிருப்பது இயல்பாகவே சந்தேகங்களுக்கு வழிவகுத்திருக்கிறது.

அமைச்சரவை ஆகஸ்டில் வழங்கிய அங்கீகாரத்தின் பிரகாரம் புதியதொரு எல்லை நிர்ணயக்குழு நியமிக்கப்படுமாக இருந்தால், அது புதிதாக அதன் செயன்முறைகளை தொடங்கும் பட்சத்தில் அடுத்த வருடம் மாகாணசபை தேர்தல்களை நடத்துவது எந்தவிதத்திலும் சாத்தியமில்லை. அதனால் மீண்டும் தேர்தல்கள் ஓரிரு வருடங்கள் தாமதிக்கப்படுவதற்கான வாய்ப்பே இருக்கிறது. ஆனால், ஏற்கெனவே ஏழு வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றம் நிராகரித்த எல்லை நிர்ணயக்குழுவின் அறிக்கையை தற்போதைய பிரதமரின் தலைமையில் குழுவொன்றை அமைத்து மீள்பரிசீலனை செய்யும் உத்தேசம் அரசாங்கத்துக்கு இருக்கிறது என்று சில அரசியல் வட்டாரங்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

மாகாணசபை தேர்தல்களை மேலும் தாமதிக்காமல் விரைவாக நடத்த வேண்டுமானால், ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் அதை நடத்துவதே நடைமுறைச் சாத்தியமான ஒரேயொரு வழிமுறையாகும். அதற்கு வழிசெய்யும் வகையில் முன்னைய அரசாங்க காலத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தனிநபர் பிரேரணை என்ற வடிவில் கொண்டு வந்ததைப் போன்ற சட்டமூலத்தை தற்போது தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் கொண்டு வந்திருக்கிறார்.

உண்மையிலேயே மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும் என்ற அக்கறை அரசாங்கத்துக்கு இருந்தால், சாணக்கியனின் தனிநபர் பிரேரணையை சபையில் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும். ஆனால், அதற்கான விருப்பத்தை அரசாங்கம் வெளிக்காட்டுவதாக இல்லை என்பது மாத்திரமல்ல தானாகவே அத்தகைய சட்டமூலம் ஒன்றை கொண்டு வந்து நிறைவேற்றும் நோக்கமும் அதற்கு இல்லை. பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு இருக்கும் மூன்றில் இரண்டு ஆசனங்களுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலத்தை பயன்படுத்தி அதை இலகுவாகச் செய்யமுடியும்.

மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்துவதற்கு குறுக்கே நிற்கும் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண வேண்டியது முற்று முழுதாக அரசாங்கத்தின் பொறுப்பேயாகும். தாமதத்துக்கு இடமளிக்காமல் உகந்த முறையில் தேர்தல்களை நடத்துவதாக உறுதியளித்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அவற்றை பின்போடுவதை எந்த காரணத்தின் அடிப்படையிலும் நியாயப்படுத்த முடியாது. பாராளுமன்ற தேர்தலைப் போன்று உள்ளூராட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு பிரமிக்கத்தக்க வெற்றி கிடைத்திருந்தால் அதைத் தொடர்ந்து உடனடியாகவே அரசாங்கம் மாகாணசபை தேர்தல்களை நிச்சயமாக நடத்தியிருக்கும்.

தேர்தல்களை பின்போடுவதன் மூலமாக மேற்கொண்டும் வாக்கு வீழ்ச்சியை எந்த அரசாங்கத்தினாலும் தவிர்க்க முடியாது. தேர்தல்களை தாமதிப்பதனால் மேலும் வாக்குகளில் வீழ்ச்சி ஏற்படுமே தவிர, மக்களின் ஆதரவை எந்த வகையிலும் அதிகரிக்க முடியாது. தோல்விப் பயத்தில் தேர்தல்களை ஒத்திவைத்த சகல அரசாங்கங்களுமே படுதோல்வியையே சந்தித்தன என்பதை இன்றைய அரசாங்கத் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இது இவ்வாறிருக்க, தென்னிலங்கை அரசியல் நிகழ்வுப் போக்குகளில் ஒரு விசித்திரமான திருப்பத்தை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

கடந்த ஒரு தசாப்தத்துக்கும் அதிகமான காலமாக மாகாணசபை தேர்தல்களைப் பற்றி எந்தவிதமான அக்கறையும் இல்லாமல் இருந்த தற்போதைய எதிர்க்கட்சிகள் அந்த தேர்தல்களை விரைவாக நடத்துமாறு அண்மைக் காலமாக அரசாங்கத்தை வலியுறுத்தத் தொடங்கியிருக்கின்றன. மாகாணங்களுக்கான அதிகாரப்பரவலாக்கம் மீதான அக்கறை அதற்கு காரணமில்லை என்பதை புரிந்துகொள்வதில் எவருக்கும் சிரமம் இருக்க முடியாது.

உள்ளூராட்சி தேர்தல்களில் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட பின்னடைவினால் உற்சாகமடைந்த எதிர்க்கட்சிகள், தேசிய தேர்தல்களின்போது தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்கு வழங்கிய பெருவாரியான வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற முடியாமல் இருப்பதன் காரணத்தினால் அடுத்து வரக்கூடிய எந்தவொரு தேர்தலிலும் அதற்கு பாரிய பின்னடைவு ஏற்படும் என்று எதிர்பார்க்கின்றன.

மறுபுறத்தில், மத்தியில் தற்போதைக்கு அதிகாரத்துக்கு வரக்கூடிய வாய்ப்பு இல்லை என்பதால், இந்த எதிர்க்கட்சிகள் ஆட்சிமுறையின் இரண்டாம் அடுக்கான மாகாணசபைகளில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் நாட்டம் காட்டுகின்றன. ஏற்கெனவே படுமோசமாக பலவீனமடைந்திருக்கும் இந்த கட்சிகள் ஏதாவது ஒரு மட்டத்தில் அதிகாரப் பதவிகளுக்கு நீண்ட காலத்துக்கு வரமுடியாவிட்டால் அவற்றின் கட்டமைப்புக்கள் மேலும் சீர்குலையாமல் தடுப்பது கஷ்டமான காரியமாக இருக்கும். மாகாணசபை தேர்தல்கள் தொடர்பில் இந்த கட்சிகள் அரசாங்கத்துக்கு சவால் விடுப்பதற்கு துணிச்சல் கொண்டதற்கு இதுவே காரணமாகும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் அபிவிருத்தியில் பெருமளவில் அக்கறை காட்டும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்



கலாநிதி ஜெகான் பெரேரா

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னைய எந்தவொரு அரசாங்கமும் நெடுங்காலமாக செய்திராத வகையில் வடக்கின் அபிவிருத்தியில் அதன் நேரத்தையும் பணத்தையும் முதலீடு செய்து கொண்டிருக்கிறது. ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க, சபை முதல்வர் பிமால் இரத்நாயக்க போன்ற அரசாங்கத்தின் அதியுயர் மட்டத் தலைவர்கள் கூட தங்களது பெருமளவு நேரத்தையும் ஆற்றலையும் வடக்கில் செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். தங்களது விஜயங்களின்போது அவர்கள் சமுதாயத்தின் பல்வேறு தரப்புகளையும் சேர்ந்தவர்களை நேருக்கு நேர் சந்திப்பதுடன் மக்களுக்கு பயன் தரக்கூடிய புதிய அபிவிருத்தி திட்டக்களை ஆரம்பிக்கிறார்கள்.

இத்தகைய நேருக்கு நேர் ஊடாட்டக்கள் பௌதீக பிணைப்பை மாத்திரமல்ல, ஒரு காலத்தில் போரினால் அவலங்களைச் சந்தித்த பகுதிகளின் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான நம்பிக்கை மீளக்கட்டியெழுப்பப்படுவதையும் வெளிக்காட்டுகின்றன. கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் பிமால் இரத்நாயக்க யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அப்பால் இருக்கும் சிறிய தீவுகளுக்கு பயணிகளை ஏற்றிச் செல்லும் படகுகள் புறப்படும் நிலையமான குறிக்கட்டுவான் இறங்குதுறைக்கு செல்லும் வீதியை அகலப்படுத்துவதற்கான பணிகளை தொடக்கி வைத்தார்.

குறிக்கட்டுவான் இறங்குதுறைக்குச் செல்லும் வீதியின் அபிவிருத்தி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டிருப்பது யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அப்பால் உள்ள தீவுகளுடனான இணைப்பை மேம்படுத்துவதை நோக்கிய முக்கியமான ஒரு நடவடிக்கையை குறித்து நிற்கிறது என்று அமைச்சர் இரத்நாயக்க அறிவித்தார். இந்த தீவுகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது நாகதீப என்றும் இன்று பிரபல்யமாக அறியப்படும் நயினாதீவு என்பதில் சந்தேகமில்லை.

இந்த உலகில் தனது யாத்திரையின்போது புத்தபெருமான் இலங்கைக்கு வருகைதந்த வேளையில் சென்ற மூன்று இடங்களில் நாகதீபவும் ஒன்று என்று மரபுரையில் கூறப்படுகிறது. அதனால் பௌத்தர்களின் மிகவும் புனிதம் வாய்ந்த மதத் தலங்களில் நாகதீபவும் ஒன்றாக விளங்குகிறது. நாட்டின் ஏனைய பாகங்களில் இருந்து தினமும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் நாகதீபவுக்கு விஜயம் செய்கிறார்கள். வார இறுதி நாட்களில் யாத்தரிகர்களின் எண்ணிக்கை கடுமையாக அதிகரிப்பது வழமையாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து குறிக்கட்டுவானுக்கு செல்கின்ற வீதியை அபிவிருத்தி செய்வது இந்த யாத்திரிகர்கள் நேரத்தைச் சேமிக்க உதவும். உள்ளூர் மட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் இத்தகைய நடவடிக்கைகள் மறுமலர்ச்சியின் விதைகளாக இருக்க முடியும். யாழ்ப்பாணத்தில் அந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் இரத்நாயக்க, இந்த அபிவிருத்தி நடவடிக்கை அன்றாட பயணத்துக்காக படகுகளை நம்பியிருக்கும் ஆசிரியர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்கள் உட்பட சூழவுள்ள தீவுகளில் வசிப்பவர்களும் அதிகாரிகளும் எதிர்நோக்கும் போக்குவரத்து கஷ்டங்களை பெருமளவுக்கு தணிக்கவும் செய்யும்.


படகுச் சேவையை பயன்படுத்தும் பயணிகள் தற்போது கணிசமான இடர்பாடுகளை அனுபவிக்கிறார்கள். நிழல் இன்றி அவர்கள் சுட்டெரிக்கும் வெயிலில் நீண்டநேரமாக காத்திருக்க வேண்டியிருக்கிறது. வரிசையில் நிற்பவர்கள் ஒருவருடன் மற்றவர் இடிபடாமல் படகுகளில் ஏறுவதற்கு வசதியாக ஏற்பாடு எதுவும் கிடையாது.

படகுச்சேவைகள் குறைவாக உள்ள சந்தர்ப்பங்களில் காத்திருக்கும் மக்கள் அங்கலாய்த்து அமைதியிழந்து விடுகிறார்கள். படகுகளில் மக்கள் ஏறுகின்ற நிலைகளில் கடமையில் இருக்கும் அரசாங்க அதிகாரிகள் பயணிகளின் கஷ்டங்களை புரிந்து கொள்பவர்களாகவும் கிடைக்கக்கூடிய படகுகளில் மக்கள் எல்லோரையும் ஏற்றிவிடுவதில் அக்கறையுடையவர்களாகவும் இருக்கிறார்கள். படகுகளுக்குள் நெரிசல் தாங்கிக்கொள்ள முடியாததாக இருக்கிறது. ஆனால் அந்த கஷ்டத்தை பயணிகள் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

அதனால், குறிக்கட்டுவானில் படகுச்சேவையை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் படகுச் சேவைகளின் தரத்தை உயர்த்துபவையாக அமைவது அவசியமாகும். அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற படகுச்சேவை மக்களுக்கு ஓரளவு வசதியாக இருக்கிறது. ஆனால், தனியார் சேவைகள் பயன்படுத்தும் படகுகள் மீன்பிடிப் படகுகளை விடவும் மோசமானவையாக இருக்கிறது. அந்த படகுகளில் பெரும்பாலான பயணிகள் நின்று கொண்டு அல்லது படகுகளின் தளத்தில் அமர்ந்துகொண்டு பயணம் செய்கிறார்கள்.

அளவுக்கு அதிகமாக படகுகளில் மக்கள் ஏற்றப்படாமல் இருப்பதை உறுதி செய்யக்கூடியதாக பயணிகளின் எண்ணிக்கையை இறங்குதுறையில் கடமையில் இருக்கும் அரசாங்க அதிகாரிகள் ஒழுங்கமைத்து கட்டுப்படுத்த வேண்டும். அத்துடன் ஒவ்வொரு பயணிக்கும் உயிர்காக்கும் அங்கி வழங்கப்படுவதையும் உறுதிசெய்ய வேண்டும். தற்போது சகல பயணிகளுக்கும் உயிர்காக்கும் அங்கி வழங்கப்படுவதாக இல்லை.

குறிக்கட்டுவானுக்கு செல்லும் வீதியை திறந்துவைத்து உரையாற்றிய அமைச்சர் இரத்நாயக்க, இனம், மதம் மற்றும் பிராந்திய வேறுபாடுகளுக்கு அப்பால் சகல மக்களையும் சமத்துவமாக நடத்தி அபிவிருத்தியில் சமத்துவமான வாய்ப்புக்களை வழங்கும் அரசாங்கத்தின் உறுதிமொழியை மீண்டும் வலியுறுத்திக் கூறினார்.



காங்கேசன்துறையின் ஊடான மார்க்கம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தூரத்தை குறைப்பது மாத்திரமல்ல, இந்தியா ஊடாக இலங்கையை பரந்த உலகத்துடனும் இணைக்கும். உள்நோக்கிய பார்வை எம்மைச் சிறியவர்களாகவே தொடர்ந்தும் வைத்திருக்கும். வெளியுலகுடன் இணைக்கப்பட வேண்டியது முக்கியமானதாகும்.

கடந்த வருடத்தைய தேர்தல்களில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இந்த உறுதிமொழியின் விளைவாகவே வடக்கு மக்கள் நாட்டின் ஏனைய பாகங்களில் உள்ள மக்கள் செய்ததைப் போன்று தேசிய மக்கள் சக்திக்கு முன்னென்றும் இல்லாத வகையிலான ஆணையை வழங்கினார்கள். வடக்கு மக்கள் இத்தகைய ஆணையை வேறு எந்தவொரு பிரதான அரசியல் கட்சிக்கும் முன்னர் ஒருபோதும் வழங்கியதில்லை. பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் நுண்மட்டத்தில் இருந்து பருநிலை மட்டத்துக்கு எல்லையை விரிவுபடுத்த வேண்டியது அவசியமாகும். பிராந்திய மட்டத்திலும் இது பிரயோகிக்கப்படுவதாக இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அப்பால் உள்ள தீவுகளில் மிகவும் பெரியது நெடுந்தீவேயாகும். இலங்கையின் பரந்தளவிலான பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பதற்கு அரசாங்கம் உறுதிபூண்டிருக்கும் இந்த தீவின் இன்றைய சனத்தொகை 5,000 மாத்திரமே என்று கவனிக்கப்பட வேண்டியதாகும். போருக்கு முன்னர் சனத்தொகை இதன் இரண்டு மடங்கிற்கும் அதிகமாக இருந்தது. நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் பிரதானமாக உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஒரு கோட்டையையும் இராணுவக் காவல் அரணையும் நிர்மாணித்த டச்சுக்காரர்களினால் (அவர்கள் 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் பல பகுதிகளை ஆட்சி செய்தனர்) விட்டுச் செல்லப்பட்ட குதிரைகளின் வழித்தோன்றல்களை பார்வையிடுவதற்காக வருகிறார்கள்.

அடுத்த வருடம் குறிக்கட்டுவான் இறங்குதுறையை அபிவிருத்தி செய்வதற்கும் அரசாங்கம் திட்டமிடுகிறது. படகுச்சேவைகளில் பயணம் செய்ய வருபவர்களுக்கு குறைந்தபட்ச வசதிகளுடன் - அபிவிருத்தி செய்யப்படாத ஒரு நிலையிலேயே தற்போது அந்த இறங்குதுறை காணப்படுகிறது. ஆனால், அயலில் இந்தியாவில் துரிதமாக செழித்துவரும் பொருளாதாரத்தினால் வழங்கப்படும் பெரியளவிலான சந்தை வாய்ப்புக்களை இந்த தீவுப் பிராந்தியத்துடனான தொடர்புகளுக்கு பயன்படுத்திக் கொள்வதன் மூலமாக பொருளாதாரத்தை ஊக்குவிப்பது குறித்து பரிசீலனை செய்யவேண்டிய தேவை இருக்கிறது.

வடக்கு, கிழக்கின் அபிவிருத்தியைப் பொறுத்தவரை, அது இடர்பாடுகள் நிறைந்ததாகவே இருக்கிறது. ஒரு காலத்தில் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கின் தற்போதைய இளஞ்சந்ததியினர் தொழில் வாய்ப்புகள் இல்லாததால் பெரும் விரக்தியடைந்திருக்கிறார்கள். அவர்கள் கொழும்புக்கு வருவதற்கு அல்லது வெளிநாடுகளுக்கு சென்று விடுவதிலேயே நாட்டம் காட்டுகிறார்கள். அதனால் அரசாங்கம் தேசிய பொருளாதாரத்துக்கு வலுச்சேர்க்கக்கூடியதாக வடக்கின் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கு உச்சபட்சமாக செயற்பட வேண்டிய தேவை இருக்கிறது.

குறிப்பாக வடக்கு, கிழக்கும் கூட பல தசாப்தங்களாக இனநெருக்கடி மற்றும் போரின் பின்புலத்தில் கையாளப்பட முடியாத ஒரு சுமையாக அல்லது பிரச்சினையாக நோக்கப்பட்டன. இன்று வடக்கும் கிழக்கும் நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் திறந்துவிடப்பட வேண்டியவையாகவும் உலகுடன் இணைக்கப்பட வேண்டியவையாகவும் நோக்கப்படுவது அவசியமாகிறது. குறிக்கட்டுவான் தீவுப்பகுதிகளை பெருநிலப்பரப்புடன் இணைப்பதைப் போன்று காங்கேசன்துறையினால் இந்திய உபகண்டத்துடன் இலங்கையை இணைக்க முடியும்.

அரசாங்கம் கடந்த காலத்தின் ஆக்கபூர்வமான சாதனைகளை தொடர்ந்து கட்டியெழுப்புவதுடன் கடந்த காலத்து பிரச்சினைகள் மற்றும் மோதல்களினால் மிரண்டுவிடாமல் பெரிதாகச் சிந்திக்க வேண்டியது அவசியமாகும். குடாநாட்டுக்கு அப்பால் உள்ள சிறிய தீவுகளுக்கும் இலங்கையின் பெருநிலப்பரப்புக்கும் இடையிலான இணைப்புக்களை விரிவுபடுத்துவதைப் போன்று அரசாங்கம் வடபகுதியில் காங்கேசன்துறையில் உள்ள துறைமுகத்தை தென்னிந்தியாவுடன் இணைக்க வேண்டியது அபிவிருத்தி செயற்பாடுகளின் ஒரு விசேட பகுதியாகும். காங்கேசன்துறை துறைமுகத் திட்டத்தை முன்னெடுப்பதற்கும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கப்பல் சேவையை மேம்படுத்துவதற்கும் முன்னைய அரசாங்கங்கள் இந்தியாவுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொண்டன.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது 2017 ஆம் ஆண்டில் முதற்தடவையாக காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது குறித்து திட்டமிடப்பட்டது. அவருடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடி போர்க்காலத்தில் பயன்படுத்தப்படாமல் இருந்துவந்த அந்த துறைமுகத்தை புனரமைப்புச் செய்வதற்கு தொடர் கடனுதவியை வழங்கவும் இணக்கம் தெரிவித்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் மீண்டும் 2019 ஆம் ஆண்டில் காங்கேசன்துறையை தமிழ்நாட்டின் நாகபட்டினத்துடன் நேரடியாக இணைத்து பயணிகள் கப்பல்சேவை மற்றும் சரக்குகள் முனையமாக விரிவுபடுத்துவது குறித்து ஆராய்வதற்கு இரு நாடுகளினதும் அரசாங்கங்கள் இணங்கிக்கொண்டன.

அதனால் காங்கேசன்துறை ஊடாக வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறை இணைப்புக்களை முழுமையாகச் செயற்படுத்துவதற்கான கட்டமைப்பு ஏற்கெனவே இருக்கிறது. இலங்கை அதற்கு தற்போது இருக்கக்கூடிய கட்டுப்பாடுகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அப்பால் வளர்ச்சியடைய வேண்டுமாக இருந்தால் உள்நாட்டில் மக்களினதும் பண்டங்களினதும் சுழற்சியில் மாத்திரம் முழுமையாக தங்கியிருக்க முடியாது. குறிக்கட்டுவானுக்கான வீதி யாழ்ப்பாணத்துக்கும் நயினாதீவுக்கும் இடையிலான பயண நேரத்தைக் குறைக்கக்கூடும்.

ஆனால், காங்கேசன்துறையின் ஊடான மார்க்கம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தூரத்தை குறைப்பது மாத்திரமல்ல, இந்தியா ஊடாக இலங்கையை பரந்த உலகத்துடனும் இணைக்கும். உள்நோக்கிய பார்வை எம்மைச் சிறியவர்களாகவே தொடர்ந்தும் வைத்திருக்கும். வெளியுலகுடன் இணைக்கப்பட வேண்டியது முக்கியமானதாகும். நாட்டுக்குள்ளும் வெளியுலகுடனும் எமது இணைப்புக்களை நாம் விரிவுபடுத்துவதைப் பொறுத்தே வடக்கின் வெற்றியும் உண்மையில் முழு நாட்டினதும வெற்றியும் தங்கியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சமஷ்டி’க்கு சொந்தக்காரர் யார்? இதுவல்ல இன்றைய பிரச்சினை!

நல்லூரான்



> எதிர்வரும் காலங்களில் புதிய அரசியல் அமைப்பு தயாரிக்கப்படுமானால், அது சமஷ்டிக்கட்டமைப்பைக் கொண்டிருக்குமானால் மகிழ்ச்சிக்குரியதுதான். அதற்காக தமிழ் கட்சிகளை ஒன்றிணைப்பதிலோ, அல்லது அதற்கான ஆதரவை பெறுவதற்காக தமிழ் மக்கள் மத்தியில் பரப்புரைகளை நடாத்துவதோ எந்தவகையிலும் தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை.

“எங்கள் கட்சிக் கொள்கையான சமஷ்டி வழிக்கு வந்த கஜேந்திரகுமாருக்கு நன்றி. சமஷ்டியை நாங்கள் விட்டுக்கொடுக்கவில்லை. தமிழ் அரசுக் கட்சியை மலினப்படுத்தி அழித்து விடலாம் என்பது பகல் கனவே” என தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்திருக்கிறார்.

இதனை அவர் கடந்த வெள்ளியன்று தான் நடாத்திய ஊடகவியலாளர் மாாநாட்டில் மட்டும் சொல்லவில்லை. இதற்கு முன்னரும் அவர் இந்த விடயத்தை பல தடவைகள் கூறியிருக்கிறார்.

“தமிழ் அரசு கட்சி ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டுவிட்டது, தாங்கள் மாத்திரமே சமஷ்டி மட்டுமே தீர்வு என்று கூறிவருகின்றோம்” என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொடர்ச்சியாகக் கூறிவருவதற்கு பதிலளிக்கும் வகையிலேயே தமிழ் அரசு தலைவர் சிவஞானம், அடிக்கடி இதனை கூறிவருகிறார்.

தமிழ் அரசு கட்சியின் கொள்கை சமஷ்டி என்பது மறுக்க முடியாததுதான். அந்தக் கட்சி ஆரம்பித்தபோதே அந்தக் கட்சிக்கு தமிழில் தமிழ்அரசு கட்சி என்றும் ஆங்கிலத்தில் “ஃபெடரல் பாட்டி” என்றும் அழைத்தவர்கள் என்பது அந்தக் கால அரசியல் தெரிந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி என்ற கட்சியில் இருந்து வெளியேறிய எஸ்.ஜே.வி. செல்வநாயம், தனியாக கட்சியை ஆரம்பித்தபோது- அதாவது அகில இலங்கை தமிழ் அரசு கட்சியை ஸ்தாபித்தபோது அதன் கொள்கை சமஷ்டி தான் என்பது சிவஞானம் அவர்கள் சொல்வதுபோல உண்மையானதுதான். ஆனால் அப்போது ஐம்பதுக்கு ஐம்பது என்ற கொள்கையோடு இருந்த தமிழ் காங்கிரஸ் கட்சி இன்றுவரை தனது கொள்ளையை சமஷ்டியாக மாற்றிக் கொண்டதாக தமிழ் மக்கள் எவரும் அறிந்திருக்கவில்லை. இன்று சமஷ்டி பற்றி பேசும் கஜேந்திரகுமார் கூட, அந்தக் கொள்கையை தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற அடையாளத்துடன் தான் வலியுறுத்திவருகிறார்.

இப்போது சமஷ்டி பற்றிய இந்த சர்ச்சையில் யார் உண்மையான சமஷ்டிக் கொள்கையாளர் என்ற இந்த குடும்பி பிடி சண்டைக்குள் செல்வதல்ல இந்த கட்டுரையாளரின் நோக்கம்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றுதான் நிரந்தரமான தீர்வைக்கொண்டுவரும் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. ஆனால் இன்றைய அரசியல் ஒழுங்கில், அது நடைமுறைக்கு சாத்தியமான ஒன்றா? என்பதே ஆழ்ந்து கவனிக்கப்படவேண்டியது. சமஷ்டி என்பது நாட்டைப்பிரிப்பதற்கு சமனான ஒன்று என்று இந்த நாட்டில் வாழும் எழுபது வீதமான சிங்கள மக்கள் நம்பிக்கொண்டிருக்கின்ற நிலையில் அது சாத்தியமானதா என்பது பற்றியே கவனிக்கவேண்டும்.

அதனைச் சாத்தியமானதாக மாற்ற வேண்டும் என்றால், சமஷ்டி ஒன்றுதான் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தரும் என்று தமிழ் மக்களை நம்பவைப்பதற்கு பதிலாக, அது நாட்டைப்பிரிப்பதற்கான கோரிக்கை அல்ல, அது நாட்டை மேலும் வலுப்படுத்துவதற்கான கோரிக்கை என்பதை சிங்கள மக்கள் நம்புவதற்கான பிரச்சரத்தைத்தான் தமிழ் கட்சிகள் முதலில் செய்ய வேண்டும்.

தமிழ் அரசு கட்சியின் தலைவர் சிவஞானம் அவர்கள் திரும்பத்திரும்ப கூறிவருகின்ற இந்த தமிழ் அரசு கட்சியின் கொள்கைபற்றி முதலில் பார்ப்போம். தந்தை செல்வா என்று அறியப்பட்ட எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் தமிழ் அரசு கட்சியை தொடங்கியபோது அதன் கொள்ளை சமஷ்டி என்ற ஃபெடரல் தான் என்று முன்னர் சொல்லியிருந்தேன். உண்மைதான், ஆனால் அதே தந்தை செல்வா தமிழ் அரசு கட்சியை தொடங்கிய சில வருடங்களிலேயே பண்டாரநாயக்காவுடனோ அல்லது டட்லி சேனநாயக்காவுடனோ ஒப்பந்தங்களைச்செய்து நமது பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயன்றபோது சமஷ்டிக் கேரிக்கையை கைவிட்டிருந்தார் என்பதை தமிழ் அரசின் தலைவர் சிவஞானம் அறியாதவரல்ல. பண்டா- செல்வா ஒப்பந்தமோ அல்லது டட்லி- செல்வா ஒப்பந்தமோ அன்று கிழித்தெறியப்படாமல் அமுல்படுத்தப்பட்டிருந்தால், இன்று தமிழ் அரசு கட்சி தமது கொள்கை சமஷ்டிதான் என்று கூறக்கூடியதாக இருந்திருக்குமோ தெரியவில்லை.

அதையும் விட முக்கியமாக நம்முன்னே நிற்கும் கேள்வி, தந்தை செல்வா உயிருடன் இருக்கும்போதே, இனி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ‘தமிழ் ஈழம்’ தான் தீர்வு என்று முழங்கிவிட்டே மூச்சை விட்டார். அதற்காகவே தமிழ் அரசு கட்சியையும் தமிழ் காங்கிரஸ் கட்சியையும் ஒன்றிணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியை தொடங்கினார். தந்தை செல்வாவின் சமஷ்டிக்கொள்ளை அவர் உயிரோடு இருந்த காலத்திலேயே காலவதியாகிப் போன ஒன்று.

இப்போது இந்தக் கட்டுரையாளர் கூறவருவது, நாம் நமது பிரச்சனைகளுக்கு தீர்வாக எது சிறந்தது - அல்லது எது சரியானது என்று கூறிக்கொண்டாலும், காலத்தையும் யதார்த்தத்தையும் புரிந்து கொண்டு அந்தக் கொள்கைகளை மாற்றிக்கொள் கின்ற ஒருவரால் தான் சரியான தலைமையை இந்த இனத்திற்கு கொடுக்கமுடியும் என்பதே.

சமஷ்டிதான் தீர்வு என்று கட்சி தொடங்கிய தந்தை செல்வா, மிகக்குறுகிய காலத்திலேயே சமஷ்டிக்கு பதிலாக கிடைக்கின்ற தீர்வு ஒன்றுக்காக இறங்கி வரத் தயாராக இருந்தார். அதுவே நல்ல தலைமைக்கு எடுத்துக் காட்டானது.

தமிழ்அரசின் தலைவர் சிவஞானம் அவர்கள் அண்மைக்காலங்களில் இன்னுமொரு விடயத்தையும் அடிக்கடி கூறிவருகின்றார். அதாவது, நல்லாட்சி அரசு காலத்தில் அப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய தமிழ் அரசு கட்சி இணைந்து தயாரித்த புதிய அரசியல் அமைப்பு தொடர்பான ‘எக்க ராஜ்ய’ திட்டத்தை தமிழ் அரசு கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை என்று சிவஞானம் அவர்கள் கூறுகின்ற ஒவ்வொரு தடவையும் இந்தக் கட்டுரையாளருக்கு ஞாபகத்திற்கு வருவது, அதனைத் தயாரித்து இடைக்கால அறிக்கையையும் வெளியிட்ட பின்னர் தமிழ் அரசின் அப்போதை எம்.பி.யான எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் யாழ்ப்பணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்திய கூட்டம் தான்.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட மூத்த பத்திரிகையாளர் என். வித்தியாதரன் அப்போது ஒரு கேள்வியை சுமந்திரன் முன் வைத்தார். “நீங்கள் தயரித்த இந்த தீர்வுப்பொதி பற்றி விளக்கமளிப்பதற்காக இந்தக் கூட்டத்தை கூட்டியுள்ளீர்கள். ஆனால் பாவம் உங்கள் பக்க நியாயங்களை தனி ஒருவராக நின்றே நீங்கள் வாதிடவேண்டியிருக்கின்றது. உங்கள் கட்சிக்குள்ளேயே உங்களுக்கு ஆதரவாக யாரும் இல்லையே” என்றார் அவர்.

அவரது கேள்வி, எவ்வளவு நியாயமானது என்பதை இப்போது சுமந்திரன் புரிந்துகொண்டிருப்பார்.

இந்த வேளையில், அந்த ‘எக்க ராஜ்ய’ தீர்வுப்பொதியை சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக தெற்கிலும் பல கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. அந்த கருத்தரங்குகளில் ஒன்றில் கலந்துகொண்டு சுமந்திரன் பேசிய வீடியோ ஒன்றை அண்மையில் பார்க்க முடிந்தது. அக்கருத்தரங்கில் பேசிய சுமந்திரன், ஒரு செய்தியை தெளிவாக அங்குள்ள சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்தினார்.

“இந்த நாட்டில் அரசியல்அமைப்பு சட்டங்கள் உருவாக்கப்பட்டபோது தமிழ் மக்கள் அதில் சம்பந்தப்படவில்லை. நீங்களே அதனை தயரித்துவிட்டு அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தமிழ் மக்களை நிர்ப்பந்தித்ததால் தான், இந்த நாட்டில் எங்கள் விருப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதால்தான் தமிழ் மக்கள் பிரிந்துபோகவேண்டும் என்று யோசிக்க தொங்கினார்கள். இங்கே ஒருவர் உங்களுக்கு சமஷ்டியா தேவை என்று கேட்டார். இல்லை, அப்படியொன்று எமக்கு தேவையில்லை. தற்போதுள்ள மாகாணசபை முறையை கொஞ்சம் மாற்றியமைத்தால் போதுமானது. ஒரே நாட்டில் ஒற்றுமையாக வாழ எங்களுக்கு விருப்பம். அதற்காகத்தான் எங்களுக்கு எங்கள் மக்கள் வாக்களித்து ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்..”

ஏழு வருடங்களுக்கு முன்னர், அதாவது நல்லாட்சி அரசின் காலத்தில் புதிய அரசியலமைப்பு சட்டத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தபோது, சிங்கள மக்கள் மத்தியில் சுமந்திரன் ஆற்றிய உரை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

தந்தை செல்வா காலத்தில் தமிழ் அரசு எவ்வாறு சமஷ்டியைக் கைவிட்டு ஒரு தீர்வை ஏற்றுக்கொள்ள தயாராக, பண்டாரநாயக்காவுடனும் டட்லி சேனநாயக்கவுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டதோ, அதேபோலத்தான், சம்பந்தன்- சுமந்திரன் காலத்திலும் சமஷ்டியைக் கைவிட்டு புதிய அரசியலமைப்பு ஒன்றின் ஊடாக நமது பிரச்சினைக்கு தீர்வு காண முயன்றது.

அந்த அரசியலமைப்பு நடைமுறைக்கு கொண்டவரப்பட்டிருந்தால், இன்று தமிழ் அரசு தனது கொள்கை சமஷ்டிதான் என்றோ, அல்லது நாங்கள்தான் சமஷ்டிக் கொள்கைக்கு சொந்தக்காரர் என்றோ உரிமைகொண்டாடியிருக்க முடியாமல் போயிருக்கும்.

புதிய அரசியலமைப்பு சட்டம் ஒன்று உருவாக்கப்படும்போது, நடைமுறைக்கு சாத்தியமான வழியில், இந்த நாட்டில்வாழும் எண்பது வீதமான மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அதனை சாத்தியப்படுத்தவேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்தாவது, செய்துமுடிக்கவேண்டும் என்று சம்பந்தன்- சுமந்திரன் தலைமை முயன்றது. அதனை தந்தை செல்வாவின் ராஜதந்திரத்துக்கு ஈடாக பார்க்க முடிகின்றதே தவிர, அதனை கொச்சப்படுத்திவிட முடியாது.

பண்டா - செல்வா ஒபப்பந்தத்தின் மூலம் தந்தை செல்வா சமஷ்டியைக் கைவிட்டுவிட்டார் என்று யாரும் குறை சொல்லாததுபோல, ‘எக்க ராஜ்ய’ தீர்வில் சமஷ்டி என்ற பதம் இல்லாவிட்டாலும், அது நடைமுறைக்கு வந்திருந்தால், இன்று தமிழ் மக்கள் தமக்கான தீர்வை பெற்றிருப்பார்கள், அது சமஷ்டியாக இருந்திருக்காவிட்டாலும், அதில் உள்ள நன்மைகளை எடுத்தச்சொல்ல வேண்டுமே தவிர, அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று இப்போது தமிழ் அரசு சொல்வது, தமது கட்சியின் தலைமையையே சங்கடத்திற்கு உள்ளாக்கும்.

எதிர்வரும் காலங்களில் புதிய அரசியல் அமைப்பு தயாரிக்கப்படுமானால், அது சமஷ்டிக்கட்டமைப்பைக் கொண்டிருக்குமானால் அது மகிழ்ச்சிக்குரியது தான். அதற்காக தமிழ் கட்சிகளை ஒன்றிணைப்பதிலோ, அல்லது அதற்கான ஆதரவை பெறுவதற்காக தமிழ் மக்கள் மத்தியில் பரப்புரைகளை நடாத்துவதோ எந்தவகையிலும் தமிழ் மக்களுக்கு உதவப் போவதில்லை. அப்படியொரு தீர்வு வேண்டுமானால், சமஷ்டி என்பது பிரிவினை அல்ல என்று சிங்கள மக்களை நம்பவைப்பதற்கான முயற்சிகளிலேயே நாம் ஈடபடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கின் ஒருங்கிணைந்த அபிவிருத்தி போருக்கு பின்னரான முதலாவது சர்வதேச மகாநாடு


























அனைத்துலக தமிழர் பேரவை கனடாவை தளமாகக் கொண்டு அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு புதிய அமைப்பு. ஆனால் வெற்றிகரமாக ஒரு சர்வதேச ஆய்வு மகாநாட்டை ஒழுங்கு செய்திருக்கின்றது. வடக்கு கிழக்கில் ஒருங்கிணைந்த அபிவிருத்தி என்னும் தலைப்பில் 10.10.2025 அன்று றொறண்டோ ஸ்காபிறோ வளாகத்தில் இடம்பெற்றிருந்தது. மூன்று நாட்களாக இடம்பெற்ற குறித்த மகாநாடு, இன்றுடன் நிறைவுபெறுகின்றது. போருக்கு பின்னரான காலப் பகுதியில் வடக்கு கிழக்கின் அபிவிருத்தி தொடர்பில் பலரும் பார்க்கத் தவறியிருந்தனர்.

இதன் விளைவை இப்போதும் பலரும் உணருகின்றனர். தமிழ் மக்கள் தொடர்ந்தும், தமிழர் நிலத்தை விட்டு வெளியேறி வருகின்றனர். இது எங்கள் நிலம், இங்கு வாழலாம் என்னும் நம்பிக்கையை மக்களுக்கு வழங்கத் தவறினால், அவர்களது வெளியேறும் அவாவை கட்டுப்படுத்தவே முடியாது. ஒரு சமூகத்தின் இருப்பிற்கு அதன் சனத்தொகை அஸ்திபாரமானது. ஏனெனில் சனத்தொகையின் அளவுதான் ஜனநாயக பிரதிநிதித்துவத்தை தீர்மானிக்கின்றது. நிலத்தில் வாழ்வதை மக்கள் விரும்பவில்லை என்றால் அதன் பின்னர் அரசியல் என்பது மக்களை பொறுத்தவரையில் அவர்களுக்குத் தேவையற்ற ஒரு விடயமாகிவிடும்.

இந்த நிலைமைகளை துல்லியமாக மதிப்பிட்டதன் விளைவாகவே இவ்வாறானதொரு மகாநாட்டை அனைத்துலக தமிழர் பேரவை திட்டமிட்டிக்கின்றது. பேரவையின் நிறுவனரும் தலைவருமான நிமால் விநாயகமூர்த்தியின் தலைமையிலான திட்டமிடல் குழுவினர், கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக மேற்கொண்ட முயற்சியின் விளைவாகவே, குறித்த மகாநாடு வெற்றிகரமாக நடந்தேறியிருக்கின்றது. நிமால் விநாயகமூர்த்தி தமிழ் புலம்பெயர் சூழலில் இயங்கிவரும் முன்னணி சமூக மற்றும் அரசியல் செயற்பாடாளராவார். அத்துடன் சமவேளையில், தாயகத்திலும் சமூகத் தொடர்புகளை பேணிவருகின்றார். அவரது கடின முயற்சியால், பலரையும் ஒருங்கிணைப்பதில் முதல் வெற்றியை வெற்றிருக்கின்றார்.

மூன்று நாட்களாக இடம்பெற்ற மகாநாட்டில் நாற்பதுக்கும் அதிகமான ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வறிக்கைகளை சமர்ப்பித்திருந்தனர். யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா என பலநாடுகளிலிருந்தும் பேராசிரியர்கள், கல்விமான்கள், சிந்தனையாளர்கள் என்று பலர் ஒரு நிகழ்வில் சங்கமித்திருந்தனர்.

போரினால் பாதிக்கப்பட்டு நிர்மூலமான தமிழர் தாயகப் பகுதியை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாமல் வெறுமனே அரசியல் கோசங்களை உயர்த்திப் பிடிப்பதால் பயனில்லை. நிகழ்வில் ஆரம்ப உரையை ஆற்றியிருந்த பேராசிரியர் சிவநாதன், இந்த விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தார். இந்த அடிப்படையில் வடக்கு கிழக்கில் ஒருங்கிணைந்த அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் என்ன, சவால்கள் என்ன, இதில் புலம்பெயர் சமூகம் எவ்வாறு பங்களிக்கலாம் என்பதே ஆய்வுரைகளின் சாராம்சமாக இருந்தது.


மகாநாட்டில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், கருத்தொருமைப்பாடு கொண்ட, பல்வேறு நிபுணர்களையும் ஒருங்கிணைத்து, அடுத்த கட்டமாக வடக்கு கிழக்கில் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் அனைத்துலக தமிழர் பேரவை கலந்தாலோசிக்கவுள்ளது. வடக்கு கிழக்கை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்கான ஆற்றல் தமிழ் புலம்பெயர் சமூகத்திற்கு உண்டு எனினும் அதனை ஒருங்கிணைக்கவும், களத்தோடு இணைக்கவும் ஒரு பொருத்தமான தலைமைத்துவம் இல்லாமிலிருந்தது. அனைத்துலக தமிழர் பேரவை அந்த இடைவெளியை நிரப்பும் பணியில், முதல் அடியை எடுத்து வைத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் ஒரு தலைவனாக மேலெழுவாரா?



நிலாந்தன்



**வில்லன் சாகும்வரை அடித்த பின்னும் சாகாவரம் பெற்ற கதாநாயகனாக மேலெழுவது சினிமாவில் நடப்பது. ஆனால், அரசியலில் அதற்கு உண்மையும் தியாகமும் வீரமும் அதிகம் தேவை. காலமும் தேவை.**

தமிழகத்தோடு நெருங்கிய தொடர்புடைய ஈழத்தைச் சேர்ந்த ஒரு சமூக அரசியல் செயற்பாட்டாளர் சொன்னார், நடிகர் விஜய்யை நேர்காணல் செய்வதற்காக அவருடைய அலுவலகத்தோடு கதைத்து ஒரு நேரத்தை எடுத்திருக்கிறார். குறிப்பிட்ட நேரத்துக்கு அங்கே போனபோது அங்கே விஜயினுடைய தகப்பன் இருந்திருக்கிறார். விஜய்க்கு பதிலாக அவர்தான் பதில் கூறுவார் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நேர்காணல் விஜயின் பெயரில்தான் வரும். விஜயின் படங்கள்தான் காணப்படும்.

அந்த அலுவலகத்தில் நாலைந்து பேர் அமர்ந்திருந்து விஜய்யின் இலக்கத்துக்கு வரும் தொலைபேசி அழைப்புகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருப்பதையும் மேற்படி செயற்பாட்டாளர் கவனித்திருக்கிறார். அவர்கள் அனைவரும் விஜய்யின் குரலில் விஜய்யின் பாணியில் விஜய்யைப் போலவே கதைக்கிறார்களாம். அழைப்பை எடுப்பவர்கள் தமக்கு விஜய்தான் பதில் கூறுகிறார் என்று நம்புவார்கள்.

மேலும் நமது ஈழத்துச் செயற்பாட்டாளர் அங்கிருந்த வேளையில் விஜய்யின் ரசிகர் ஒருவர் கௌரவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவர் யார் என்றால் விஜய்க்கு தன்னுடைய அன்பை தெரிவிப்பதற்காக தன்னுடைய சுண்டு விரலை அறுத்து கூரியரில் அனுப்பியவர். அவரை அங்கு அழைத்து கௌரவித்திருக்கிறார்கள். அப்பொழுது நமது செயற்பாட்டாளர் விஜய்யின் தகப்பனிடம் கேட்டிருக்கிறார். "இது போன்ற விடயங்களை நீங்கள் புரொமோட் பண்ணுவது சரியா?" என்று. அதற்கு விஜய்யின் தகப்பன் சொன்னாராம், அப்படிச் செய்ய வேண்டும். ஏனென்றால் விஜய்யின் படத்தை ஒரு முறை பார்ப்பவர் அடுத்தடுத்த படங்களையும் தொடர்ந்து பார்க்குமாறு தூண்ட வேண்டும். அப்படித் தூண்டினால்தான் படங்கள் ஓடும், அதற்கு இதுபோன்ற புரமோஷன்கள் தேவை என்று. அதாவது ரசிகரைப் பக்தராக மாற்றுவது. அதற்கு ரசிகர் செய்யும் தியாகங்களைப் புரமோட் பண்ணுவது.

இது நடிகர் விஜய்யை பேட்டி காணச்சென்ற ஈழத்துச் செயற்பாட்டாளர் ஒருவருடைய தொகுக்கப்பட்ட அனுபவம்.

ரசிகர்களை பக்தர்கள் ஆக்கிய விஜய் இப்பொழுது பக்தர்களை வாக்காளர்களாக்க முயற்சி செய்கிறார். கரூரில் அந்த முயற்சி அவருக்குக் கடுமையான சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

திரையில் கிடைத்த பிரபல்யத்தை அரசியலில் முதலீடு செய்ய முனைவோர்களுக்கு தமிழகத்தில் எம்ஜிஆர் ஒரு பிரகாசமான முன்னுதாரணம். அதே சமயம் எம்ஜிஆர் ஒரு திரை நாயகன் மட்டுமல்ல. இயல்பிலேயே ஒரு வள்ளல். விஜயகாந்த் போல் சூர்யாவைப் போல.

எம்ஜிஆரரின் காலத்தில் துணை நடிகர்கள் பட்டினி கிடந்தது இல்லை என்று ஒரு விமர்சகர் சொல்லியிருந்தார். துணை நடிகர்கள் வறுமையில் வாடினால் எம்ஜிஆர் அவர்களுக்கு உதவியிருக்கிறார். ஒரு பிரமுகர் அவர் காலை ஊன்றி நிமிர்ந்த துறைக்குள் அதிகம் உதவி தேவைப்படும் தரப்புகளாக உள்ளவர்களுக்கு உதவி செய்யும் பொழுதுதான் அவர் உண்மையான வள்ளல் ஆகிறார். விஜய் அவ்வாறு துணை நடிகர்களைக் கவனித்ததில்லை என்று அந்த விமர்சகர் கூறுகிறார். தன் துறையில் உள்ள ஒப்பீட்டளவில் வசதி குறைந்த தரப்பினருக்கு உதவாத ஒருவர் தன் துறைக்கு வெளியே, அரசியலில், சமூகத்தில் நலிவுற்ற தரப்பினரை மேலுயர்த்துவார் என்று எப்படி எடுத்துக்கொள்வது? என்றும் அந்த விமர்சகர் கேட்கிறார்.

இதே கேள்வியை மேலும் ஆழமாக திரைத் துறைக்குரிய கோட்பாட்டுத் தளத்தில் நின்று கேட்கலாம். விஜய் யார்? விஜய் தமிழ் வணிக சினிமாவுக்கு ஊடாக தனது கதாநாயகப் பிம்பத்தை கட்டி எழுப்பிய ஒருவர். இங்கு கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் அவர் வளர்ந்தது வணிக சினிமாவுக்கு ஊடாக. அவர் நடித்த படங்களில் சீரியஸான கலைத்தரம் மிக்க படங்கள் என்று பார்த்தால் மிகக்குறைவு. சூர்யாவைப்போல் விக்ரமைப்போல் விஜய் சேதுபதியைப் போல புதுமையான பரிசோதனைகளை அவர் அனேகமாக நாடுவதில்லை. அவருடைய பாத்திரங்கள் பெரும்பாலும் ஒரே வகை மாதிரியானவை. தேர்ந்தெடுக்கும் பாத்திரங்களிலும் உடுப்பிலும் நடிப்பிலும் அவர் படைப்புத்திறன் மிக்க பரிசோதனைகளில் ஈடுபட்டது குறைவு.

பல ஆண்டுகளுக்கு முன்பு அவரை நேர்காணல் செய்த ஒருவர் கேட்கிறார், "நீங்கள் ஏன் வெரைட்டியான பாத்திரங்களில் நடிப்பதில்லை?" என்று. அதற்கு விஜய் கூறிய பதிலை அதே வார்த்தைகளில் இப்பொழுது என்னால் சொல்ல முடியாது. ஆனால் ஏற்கனவே ஸ்தாபிதமாக இருக்கின்ற ஃபோர்மியூலாவை அதாவது சூத்திரத்தை உடைத்துக் கொண்டு வெளியே வர அவர் தயாரில்லை என்பது அவருடைய பதிலில் தொனித்தது மட்டும் எனது நினைவில் இருக்கிறது. அதைவிட முக்கியமாக அந்தப் பேட்டியில், "உங்களுக்குப்பிடித்த ஆடை?" என்று கேட்ட போது, விஜய் கூறுகிறார் வட்டக்கழுத்து ரிசேர்டை உள்ளே அணிந்து கொண்டு, அதற்கு மேல் ஒர் ஓவர் கோர்ட்டை போடுவது. அந்த ஓவர் கோர்ட்டின் பட்டன்களை மூடாமல் திறந்து விடுவது.. என்று.

இதுதான் விஜய். தனது துறையில் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருந்த வணிக சூத்திரத்தை உடைத்துக் கொண்டு வெளியில் வராத ஒருவர், தமிழகத்தின் பிரதான நீரோட்ட அரசியல் சூத்திரத்தை உடைத்துக் கொண்டு வெளியே வந்து ஏதும் புரட்சி செய்வார் என்று எதிர்பார்க்கலாமா? அதை அவர் இனிமேல்தான் நிரூபிக்க வேண்டியுள்ளது.

அவர் வளர்ந்த தளம் அல்லது அவரைக் கட்டி எழுப்பிய தளம் வணிக நோக்கு நிலையைக் கொண்டது. அங்கு உரையாடப்படும் எல்லா சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களும் இறுதியிலும் இறுதியாக வணிக இலக்கைக் கொண்டவை. எனவே முதலாவதாக, விஜய் வணிக சினிமாவால் உயர்த்தப்பட்ட பிம்பம். அவர் சீரியஸான புரட்சிகரமான கலகக்குணம் மிகுந்த போராட்ட ஆளுமை அல்ல. சினிமாவில் அவர் கட்டியெழுப்பிய கதாநாயக பிம்பத்தை அரசியலில் தலைமைத்துவ பிம்பமாகக் கட்டியெழுப்புவதற்காக அவர் கையாளும் வழிமுறைகளை, அவருடைய உடல் மொழியை, அவருடைய பேச்சுக்களை, கரூர் சம்பவத்தின் பின் அவர் நடந்து கொண்ட விதத்தை எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால் சினிமாத்தனமே தெரியும்.

இவ்வாறு அரசியல் மேடைகளில் அவருடைய நடை, உடை, பாவனை, பந்தா, அவரைச் சுற்றி இருக்கும் மெய்க்காவலர்கள் கட்டியெழுப்பும் நாடகத்தனமான பந்தா... போன்ற எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும்பொழுது விஜய் இப்பொழுதும் ஒரு திரை கதாநாயகனாகத்தான் தெரிகிறார். அவருடைய உடல் மொழியில் ஒரு தலைவனுக்குரிய முதிர்ச்சியோ பேரமைதியோ குறைவு. அவர் தன்னை ஒரு தலைவனாகக் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது. கரூர் சம்பவத்தின் பின் அவர் நடந்து கொள்ளும் விதமும் அதைத்தான் நிரூபிக்கிறது.

வணிக சினிமாவின் மாயைக்குள் இருக்கும் அப்பாவி ரசிகர்களை அப்பாவி வாக்காளர்களாக மாற்றுவதுதான் அவருடைய நோக்கம். அந்த ரசிகர்களை விழிப்படைய வைப்பது அவருடைய நோக்கமாக இது வரை தெரியவில்லை. ஏற்கனவே அரசியலில் நன்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சூத்திரத்தை அவர் உடைப்பார் என்று எதிர்பார்க்கத்தக்க இறந்த காலம் அவருக்கு இல்லை.

இதை எப்படி எழுதுவது அவருடைய ரசிகர்களுக்குக் கோபத்தை ஏற்படுத்தலாம். ரசிக மனோநிலை வேறு, வாக்காளர் மனோநிலை வேறு. அதிலும் விழிப்புற்ற வாக்காளர் மனோநிலை முழுக்க முழுக்க வேறு.

வணிக சினிமாவின் ரசிகர்கள் கனவில் மிதப்பவர்கள். மாயையில் உழல்பவர்கள். விழிப்பில்லாதவர்கள். ரணா படத்தில் வரும் ஒரு போலீஸ் அதிகாரி கூறுவது போல "சென்டிமென்டல் இடியட்ஸ்". இந்த ரசிகர்களின் அறியாமையை, குருட்டுப் பத்தியை, விழிப்பின்மையை, மயக்கங்களை கட்சி அரசியலுக்கு மடை மாற்றுவது ஆபத்தானது. அது ஜனநாயகத்தின் உள்ளுடனைக் கோறையாக்கி விடும். பொருளாதார ரீதியாக முன்னேறிவரும் தமிழ் நாட்டின் வாக்காளர்களை அவ்வாறு பக்தர்களாகப் பேணுவது சரியா? கரூர் சம்பவம் விஜய் ஒரு தலைவருக்குரிய தகமைகளை கட்டியெழுப்ப வேண்டிய நிர்ப்பந் தத்தை அதிகப்படுத்தியிருக்கிறது.

விஜய்யின் முதலாவது பெருங்கூட்டம் நடந்தபின் தமிழகத்தைச் சேர்ந்த ஓர் அரசியல் ஆய்வாளர் கூறிய கருத்து உற்று நோக்கத்தக்கது. விஜய் இப்பொழுதுதான் கட்சியை தொடங்கியுள்ளார். ரசிகர்கள் எல்லாம் வாக்காளர்கள் அல்ல. ரசிகர்களை எப்படி வாக்காளர்களாக மாற்றுவது என்று அவர் சிந்திக்க வேண்டும். தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் அவற்றின் உட்பிரிவுகளிலும் கட்சிக்கு கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். அவ்வாறு கிராமங்களை நோக்கிய கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு ஆகக் குறைந்தது நான்கு ஆண்டுகளுக்கு மேல் செல்லும் என்று அந்த ஆய்வாளர் கூறுகிறார். அவ்வாறு தனக்குரிய கட்சிக் கட்டமைப்பை உருவாக்கிய பின் விஜய் தேர்தல்களை எதிர்கொள்வது தான் விவேகமானது என்றும் அவர் கூறியிருந்தார். அந்த அடிப்படையில் உடனடியாக வரக்கூடிய சட்டசபை தேர்தலில் விஜய் வேண்டுமானால் தனித்துப் போட்டியிடலாம். ஆனால் கட்சியாகப் போட்டியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் ஆலோசனை கூறியிருந்தார்.

ஆனால் விஜய் அவசரப்படுகிறார். தன்னை அரிதான "செலிபிரிட்டியாக" பேணிக் கொள்ளும் அதேசமயம் ஜனவசியம் மிக்க ஒரு தலைவராகவும் கட்டியெழுப்ப அவசரப்படுகிறார். வில்லன் சாகும்வரை அடித்த பின்னும் சாகாவரம் பெற்ற கதாநாயகனாக மேலெழுவது சினிமாவில் நடப்பது. ஆனால், அரசியலில் அதற்கு உண்மையும் தியாகமும் வீரமும் அதிகம் தேவை. காலமும் தேவை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தம்: காஸாவில் அடுத்து என்ன நடக்கும்?

**காத்தரின் ஹீத்வுட்**

காஸா போர் நிறுத்தத்தின் முதல் கட்டத்திற்கு இஸ்ரேலும் ஹமாஸும் ஒப்புக் கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.


கடந்த வியாழனன்று அறிவிக்கப்பட்ட முதல் கட்ட உடன்பாடு, மீதமுள்ள அனைத்து இஸ்ரேலிய பணயக் கைதிகள் மற்றும் நூற்றுக்கணக்கான பாலத்தீனிய கைதிகளை விடுவிப்பதற்கும், இஸ்ரேலிய படைகளை திரும்பப் பெறுவதற்கும், காஸாவிற்குள் உதவிகள் நுழைவதற்கும் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நடவடிக்கைகளுக்கான விவரங்கள் மற்றும் கால அவகாசம் இந்த திட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை.

கடந்த செவ்வாய்கிழமை, 7 அக்டோபர் 2023 ஹமாஸ் தாக்குதல் நடத்தி இரண்டு ஆண்டுகள் ஆகின. அந்த தாக்குதலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 251 பேர் பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.

இந்த ஒப்பந்தம் ஒரு ஆரம்ப கட்டம் மட்டுமே, காஸாவில் அடுத்து என்ன நடக்கும் என்பது பற்றிய பல விவரங்கள் இன்னும் தெளிவாக்கப்பட வேண்டும்.



டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான மற்றும் முன்னாள் பிரிட்டன் பிரதமர் டோனி பிளேர் உள்ளடக்கிய ஒரு "அமைதி வாரியத்தால்" மேற்பார்வையிடப்படும் பாலத்தீனிய தொழில்நுட்ப வல்லுநர்களின் ஒரு தற்காலிக இடைக்கால குழுவால் காஸா நிர்வகிக்கப்படும் என்று ட்ரம்பின் திட்டம் முன்மொழிகிறது.



ட்ரம்பின் குழு வெளியிட்ட திட்டத்தின் படி, பாலத்தீன அதிகார சபை "அதன் சீர்திருத்த திட்டத்தை முடித்தவுடன்" காஸாவின் நிர்வாகம் இறுதியில் அதனிடம் ஒப்படைக்கப்படும்.

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காஸாவின் நிர்வாகத்தில் ஹமாஸுக்கு எதிர்காலத்தில் பங்கு இருக்காது.

ஹமாஸ் உறுப்பினர்கள் அமைதியான சகவாழ்வுக்கு உறுதியளித்தால் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் அல்லது வேறு நாட்டிற்கு பாதுகாப்பாக செல்ல வழி வழங்கப்படும் என்று திட்டம் கூறுகிறது.

இஸ்ரேலிய அமைச்சரவை ஒப்புதல் அளித்த 24 மணி நேரத்திற்குள் போர் நிறுத்தம் நடைமுறைக்கு வரும் என்று இஸ்ரேலிய அரசாங்க செய்தித் தொடர்பாளர் வியாழக்கிழமை தெரிவித்தார்.

லண்டனில் உள்ள ஐரோப்பிய வெளியுறவு கவுன்சில் எனும் சிந்தனைக் குழுவின் மூத்த கொள்கை வகுப்பாளர் ஹக் லோவாட், போர்நிறுத்த ஒப்பந்தம் என்பது காஸா மக்கள் "இனி தங்கள் உயிருக்கு பயப்படக்கூடாது" என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று கூறுகிறார்.

"மூன்று விஷயங்கள் - கொல்லப்படாமலும், இடம்பெயராமலும், பட்டினி கிடக்காமல் இருப்பதும் - காஸா மக்களுக்கு இந்த நேரத்தில் மூன்று மிக முக்கியமான அளவுகோல்கள்" என்று அவர் தெரிவித்தார்.

"தனிப்பட்ட பாதுகாப்பிற்குப் பிறகு, மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பியவுடன், அவர்கள் நிச்சயமாக, தங்கள் வாழ்க்கையை எவ்வாறு மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்பதில் கவனம் செலுத்துவார்கள்," என்று லோவாட் கூறுகிறார்.

உண்மையில், காஸா மக்கள் இந்த செய்தியைக் கண்டு மகிழ்ச்சியடைகிறார்கள்.

காஸாவில் வசிக்கும் ஜூமா ரமலான் அபு அம்மோ, அளித்த பேட்டியில், "எங்கள் வீட்டின் இடிபாடுகளை முதலில் அகற்ற வேண்டும், அவற்றை அகற்றி எனது தாத்தா மற்றும் பாட்டியின் உடல்களை மீட்கப் போகிறேன்" என்றார்.

"அதன் பிறகு, நாங்கள் வீட்டை மீண்டும் கட்டத் தொடங்குவோம். கடவுள் விரும்பினால், நாங்கள் காஸா முழுவதையும் மீண்டும் கட்டியெழுப்புவோம், அது முன்பை விட சிறப்பாக திரும்பும்" என்றார்.

அக்டோபர் 7 தாக்குதல்களுக்கு இஸ்ரேலின் ராணுவ பதிலடி நடவடிக்கையில் காஸாவின் பெரும்பாலான கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு அழிந்துவிட்டன.

காஸாவின் ஹமாஸ் நடத்தும் அரசாங்க சுகாதார அமைச்சகத்தின் கூற்றுப்படி, போரில் 67,000 க்கும் மேற்பட்ட பாலத்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர், அவர்களில் பெரும்பாலோர் பொதுமக்கள் - 18,000 க்கும் மேற்பட்டோர் குழந்தைகள் ஆவர். .

அதன் புள்ளிவிவரங்கள் பொதுவாக ஐ.நா மற்றும் பிற சர்வதேச அமைப்புகளால் நம்பகமானவை என்று கருதப்படுகின்றன.

ட்ரம்பின் 20 அம்ச திட்டத்தில், ஆகஸ்ட் மாதம் ஐ.நா ஆதரவிலான நிபுணர்களால் பஞ்சம் உறுதிப்படுத்தப்பட்ட காஸா பகுதிக்கு உடனடியாக "முழு உதவி" அனுப்ப அனுமதிப்பதும் அடங்கும்.

இந்த (உதவிகளின்) அளவு "மனிதாபிமான உதவி தொடர்பான 19 ஜனவரி 2025 ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டவற்றுடன் ஒத்துப்போக வேண்டும்" என்று திட்டம் கூறுகிறது.

ஒவ்வொரு நாளும் 600 (உதவிப் பொருட்களை கொண்டு செல்லும்) லொரிகள் வழங்கப்படும் என்று இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் கூறியதை மேற்கோள் காட்டி ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆரம்பத்தில் தினசரி குறைந்தபட்சம் 400 லொரிகள் வரும் என்றும், அதன் பிறகு இந்த எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கும் என்றும் பாலத்தீனிய தரப்பை மேற்கோள் காட்டி ராய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், காஸாவில் உள்ள மக்களை சென்றடைய புகழ்பெற்ற சர்வதேச உதவி நிறுவனங்கள் பாதுகாப்பாக உணரும் ஒரு சூழல் இருக்க வேண்டும் என்று லோவாட் வலியுறுத்துகிறார்.

முந்தைய ஐ.நா தலைமையிலான உணவு விநியோக முறையை மாற்றிய சர்ச்சைக்குரிய காஸா மனிதாபிமான அறக்கட்டளை என்னவாகும் என்பதை ட்ரம்பின் திட்டம் குறிப்பிடவில்லை.

லோவாட் இதுபற்றி கூறுகையில், "கடந்த போர் நிறுத்தம் முறிந்ததில் இருந்து உதவித் தளங்களைச் சுற்றி பாதுகாப்பு சூழல் கணிசமாக மோசமடைந்துள்ளது என்பதில் நாம் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்." என்றார்.



**ஒப்பந்தம் நிலைக்குமா?**

இந்த உடன்படிக்கை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் யுத்தம் தொடங்கியதில் இருந்து இரு தரப்பிலிருந்தும் காணப்பட்ட மிக உயர்ந்த முன்னேற்றமாகும்.

ஆனால் டொனால்ட் ட்ரம்பின் 20 அம்ச திட்டம் உண்மையில் ஒரு சில பக்கங்கள் மட்டுமே உடையது என்று ஜெருசலேமில் உள்ள பிபிசி நிருபர் டாம் பென்னட் சுட்டிக்காட்டுகிறார்.

இரு தரப்பினரும் தீர்க்க இன்னும் முக்கிய விசயங்கள் உள்ளன என்று அவர் கூறுகிறார்.

ஹமாஸ் ஆயுதங்களை முழுமையாக கைவிட வேண்டும் என்ற முக்கிய இஸ்ரேலிய கோரிக்கை, அத்துடன் இஸ்ரேலிய (படைகளின்) திரும்பப் பெறுதலின் அளவு மற்றும் காஸாவை யார் ஆட்சி செய்வார்கள் என்பதற்கான திட்டம் ஆகியவை இதில் அடங்கும்.

ட்ரம்ப் திட்டத்தின் முதல் கட்டத்தை செயல்படுத்த முடியும் என்று தான் நினைக்கிறேன் என்று லோவாட் கூறினார், ஆனால் அதன் பிறகு என்ன நடக்கும் என்பது உறுதியாக இல்லை, ஏனெனில் இஸ்ரேலிய "சிவப்புக் கோடுகளை" கடக்க முடியாது.

"வெள்ளை மாளிகையுடனான தனது பத்திரிகையாளர் சந்திப்பிற்குப் பிறகு நெதன்யாகு காஸாவில் இருந்து முழு இஸ்ரேலிய வெளியேற்றம் இருக்காது என்றும், பாலத்தீன அரசு இருக்காது என்றும் கூறினார்," என்கிறார்.

"திட்டத்தை செயல்படுத்துவதில் இவை வெளிப்படையாக இரண்டு பெரிய தடைகள், ஏனென்றால் இஸ்ரேல் காஸாவிலிருந்து முழுமையாக வெளியேறாவிட்டால் திட்டத்திற்கான பாலத்தீனிய உறுதிப்பாட்டை பராமரிப்பது கடினம்," என்று அவர் மேலும் கூறினார்.

இந்த சமாதான முயற்சிகளில் உள்ள முக்கிய வேறுபாடு அதிபர் ட்ரம்பின் தனிப்பட்ட ஈடுபாடு ஆகும். அவர் ஹமாஸ் மீது மட்டுமல்ல, இஸ்ரேல் மீதும் ஒரு ஒப்பந்தத்திற்காக அழுத்தம் கொடுத்துள்ளார் என்று ஜெருசலேமில் உள்ள பத்திரிகையாளர் ஹியூகோ பச்சேகா கூறுகிறார்.

இந்த ஒப்பந்தத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வது ட்ரம்பின் இன்றுவரையிலான மிகப்பெரிய வெளியுறவுக் கொள்கை சாதனையாக இருக்கும். அக்டோபர் 10 வழங்கப்படவுள்ள உலகின் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட விருதுகளில் ஒன்றான அமைதிக்கான நோபல் பரிசை அவர் விரும்புகிறார் என்ற உண்மையை அவர் ரகசியமாக வைத்திருக்கவில்லை.

லோவாட் கூறுகையில், "இஸ்ரேலிய அல்லது மத்திய கிழக்கு ராஜதந்திரத்தில், குறிப்பாக இஸ்ரேல்-பாலத்தீனிய ராஜதந்திரத்தில் அமெரிக்கா எப்போதும் மிக முக்கியமான பங்கைக் கொண்டுள்ளது. மேலும், குறைந்தபட்சம் கோட்பாட்டளவில், நிகரற்ற கட்டுப்பாடு கொண்டுள்ளது, அதை இஸ்ரேல் மீது பயன்படுத்த முடியும். ட்ரம்ப், உள்நாட்டு அரசியல் மற்றும் நிலைப்பாட்டின் காரணமாக, அந்த விஷயத்தில் குறிப்பாக நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளார் என்று நான் நினைக்கிறேன்."

ட்ரம்ப் வரும் நாட்களில் எகிப்துக்கு பயணம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அங்கு அவரது பேச்சுவார்த்தையாளர்கள் ஒரு ஒப்பந்தத்தில் பணியாற்றி வருகின்றனர். வெள்ளிக்கிழமை அவர் அங்கு செல்வது குறித்து பரிசீலித்து வருவதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. (பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு ஆண்டில் ஐந்து பிரதமரை கண்ட பிரான்ஸ்: மக்ரோனின் சிறுபான்மை அரசு நிலைக்குமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கடந்த இரு ஆண்டுகளில் பிரெஞ்சுத் தலைவர் மக்ரோனின் சிறுபான்மை அரசாங்கங்கள் ஒன்றன் பின் ஒன்றாக கவிழ்ந்துள்ளன. எலிசபெத் போர்ன், கேப்ரியல் அட்டால், மைக்கேல் பார்னியர், பிரான்சுவா பேய்ரூ மற்றும் இப்போது திரு. லெகோர்னு ஆகியோர் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துள்ளனர்.

பிரான்ஸ் நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் பிரதமர்களின் தொடர் ராஜினாமா ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனை பாரிய கொந்தளிப்புக்கு ஆழ்த்தியுள்ளது.

இறுதியாக செபாஸ்டியன் லெகோர்னு தனது புதிய அமைச்சரவையை வெளியிட்ட 14 மணி நேரத்திற்குப் பிறகும், பிரதமராக நியமிக்கப்பட்ட ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திலும் கடந்த 6ம்திகதி திங்களன்று ராஜினாமா செய்தார்.


திரு. மக்ரோனின் கட்சியின் பெரும்பான்மை இல்லாத நிலையில், இடைவிடாத அரசியல் நிச்சயமற்ற காலகட்டத்தில் பிரான்சில் அரசியல் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்தும் பிரான்சை உலுக்கி வரும் முன்னோடியில்லாத அரசியல் நிகழ்வுகள் தீவிரம் அடைந்து வருகின்றன.

**14 மணி நேர அரசு சரிந்தது:**

கடந்த திங்கட்கிழமை திரு. லெகோர்னு தனது ராஜினாமாவை வழங்கியபோது, 14 மணி நேரத்திற்குள் அவர் பெயரிட்ட புதிய அமைச்சரவையின் கீழ் இருந்து தனது பெயரை அகற்றினார்.

புதிதாக மீண்டும் நியமிக்கப்பட்ட சுற்றுச்சூழல் அமைச்சரும் திரு. மக்ரோனின் விசுவாசமான ஆதரவாளர்களில் ஒருவருமான ஆக்னஸ் பன்னியர்-ருனாச்சர், தனது எக்ஸ் தளத்தில் "இந்த சர்க்கஸை நான் முன் கூட்டியே அறிந்தேன், என்னை விரக்தியடையச் செய்கிறது" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

இந்த திடீர் ராஜினாமாவுக்குப் பிறகு அரச நிர்வாகத்தை காப்பாற்ற பதவி விலகிய பிரெஞ்சு பிரதமருக்கு மக்ரோன் இரண்டு நாட்கள் அவகாசம் கொடுத்தார். இந்த அரசு 14 மணி நேரத்திற்குப் பிறகு பதவி விலகியமையால், பிரான்ஸை மற்றொரு அரசியல் நெருக்கடியில் ஆழ்த்தியுள்ளது.




2017 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி பதவியை வகிக்கும் , தன்னை "கடிகாரங்களின் எஜமானர்" என்று மக்ரோன் பிரபலமாக வர்ணித்து வருகிறார். ஆரம்பத்தில் பிரெஞ்சுத் தலைவரின் கீழ் அரசு உறுதியான கட்டுப்பாட்டில் இருந்தது. தற்போது பிரான்சின் அரசியல் மாற்றங்களால் அவரால் அரசை வழிநடத்த முடியவில்லை என்பது மட்டுமல்ல, கட்சியின் அடிப்படை தளத்தையும் இழந்து வருகிறார்.

அதேவேளை திரு. லெகோர்னு தனது ராஜினாமாவிற்கு அளித்த காரணங்கள் திரு. மக்ரோனுக்கு மிகவும் சங்கடமான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திற்கு முன்பு, முந்தைய பிரதமர் பிரான்சுவா பேய்ரூ பிரதமர் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டார்.


தேசிய சட்டமன்ற வாக்கெடுப்பால் தூக்கி எறியப்பட்ட பிறகு, அவருக்கு வழங்கப்பட்ட வேலை சாத்தியமற்றது என்று நிரூபிக்கப்பட்டது, அதுவே மீளவும் நிகழ்ந்துள்ளது.

செப்டம்பரில் பிரான்சுவா பேய்ரூ பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கு, அரசியல் ஸ்பெக்ட்ரம், தொழிற்சங்கங்கள் மற்றும் வணிகத் தலைவர்களுடன் மூன்று வார பேச்சுவார்த்தைகள் பிரான்சின் உயர்மட்ட உள்நாட்டு முன்னுரிமையான அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் உடன்படுவதற்குப் பின்னால் ஒருமித்த கருத்தை உருவாக்கத் தவறிவிட்டமை முக்கிய காரணங்களாக இருந்தன.

தற்போது பிரதமராக இருப்பது ஒரு கடினமான பணி, சந்தேகத்திற்கு இடமின்றி, தற்போது சற்று கடினமானது. ஆனால் அரசியல் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் ஒருவர் பிரதமராக தொடர்ந்து பதவியில் இருக்க முடியாது என்றும் திரு. லெகோர்னு



**மக்ரோனின் கட்சிக்கு பெரும்பான்மை இல்லாத நிலையில், பிரான்சில் அரசியல் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. எலிசபெத் போர்ன், கேப்ரியல் அட்டால், மைக்கேல் பார்னியர், பிரான்சுவா பேய்ரூ தற்போது லெகோர்னு என இரு ஆண்டுகளில் சிறுபான்மை அரசாங்கங்கள் ஒன்றன் பின் ஒன்றாக கவிழ்ந்துள்ளன.**



கூறினார்.

லெகோர்னு, தனது 19 வயதிலேயே நாடாளுமன்ற உதவியாளராகவும், 22 வயதிலேயே அமைச்சரவை ஆலோசகராகவும் ஆனவர். இளம் வயதிலேயே அரசியலில் பல முக்கியப் பதவிகளை வகித்த அனுபவம் கொண்டவர். பல்வேறு துறைகளில் அனுபவம் மிக்கவர். பாதுகாப்பு, உள்ளூார் நிர்வாகம், சுற்றுச்சூழல், வெளிநாட்டு விவகாரங்கள் என பல முக்கியத் துறைகளில் அமைச்சராகப் பணியாற்றியுள்ளார்.

ஆனால் தற்போது பிரதமர் பதவியில் தொடர்வதற்கு சரியான சூழ்நிலைகள் இல்லை. அரசியல் கட்சிகளின் பிரிவினைவாத ஆசைகள் தனது ராஜினாவுக்கு காரணமாகும் என்று தெரிவித்துள்ளார். பிரதமராக தனது பணியைச் செய்வதற்குரிய சூழ்நிலைகள் நிறைவேறவில்லை



என்றும் தெரிவித்தார்.

**பிரான்சின் எதிர்காலம் ?**

1950களின் இறுதியில் பிரான்சில் இதுபோன்ற அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டன. அப்போது அதிபருக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டு புதிய அரசியலமைப்பு சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக பிரான்சில் நிலையான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது.

ஆனால் தற்போது பிரான்சின் அரசியல் நெருக்கடி நிலைமை அதன் எல்லைகளைத் தாண்டியும் பெரும் விளைவுகளை ஏற்படுத்துகிறது. ஐரோப்பாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரமான பிரான்சின் நிலையற்ற தன்மை, முதலீட்டாளர்களை பெரும் அளவில் பாதித்துள்ளது.

மேலும் பிரான்ஸ் நாட்டுக்குள் இந்த நெருக்கடி அரசு மீதான நம்பிக்கையை குறைக்கிறது. மக்களின் ஒய்வூதியத் திட்டங்கள், சுகாதாரம், கல்வி போன்ற முக்கிய அம்சங்கள் பாரியளவில் பாதிக்கப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக கோடீஸ்வரர்களுக்கு வரி சலுகைகள் அளிக்கப்பட்டதால், மக்கள் இந்த நிதி வெட்டுக்களை ஏற்க மறுக்கின்றனர்.

**பிரான்ஸ் ஜனாதிபதி - பிரதமர் முறை:**

ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும், பிரெஞ்சு மக்கள் ஒரு ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கிறார்கள். பின்னர் அவர் ஒரு பிரதமரை நியமிக்கிறார். ஆனால் இதற்கு பாராளுமன்றத்தின் ஒப்புதல் தேவை.

பிரான்சில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் அதிகாரம் பகிரப்பட்டு, அரை-ஜனாதிபதி அரசாங்க அமைப்பு உள்ளது. மேலும் ஜனாதிபதி வெளியுறவுக் கொள்கை குறித்து கவனம் செலுத்தி வருவதுடன், பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களில் முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் உள்ளவராக இருக்கிறார். என்றாலும், பிரதமர் உள்நாட்டு விவகாரங்களை கவனித்து வருகிறார்.

பிரான்சில் உள்ள முக்கிய கட்சிகள் நாட்டை ஆள்வதை விட 2027 ஜனாதிபதித் தேர்தலில் அதிக கவனம் செலுத்துகின்றன என்று பரவலாக பேசப்படுகிறது.

**கூட்டணி பாரம்பரிய தோல்வி:**


பிரான்ஸ் நாடானது ஜூன் 2024 தேர்தல்களிலிருந்து அரசியல் கொந்தளிப்பில் உள்ளது. இதன் விளைவாக பிளவுபட்ட கீழ் சபை ஏற்பட்டது.

திரு. மக்ரோனின் கட்சி 2024 தேர்தல்களில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தி தொங்கு நாடாளுமன்றத்தை உருவாக்கியபோது, தனது மையவாத அரசியல் மூலம், தொடர்ந்து ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று நம்பியது.

இருப்பினும் நிலையான பெரும்பான்மை இல்லாததால், அவர்கள் தேசிய சட்டமன்றத்தில் பல கூட்டணிகளை உருவாக்க வேண்டியிருந்தது. ஆனால் 577 இடங்களைக் கொண்ட பாராளுமன்றம், மூன்று முக்கிய தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இடது, மைய மற்றும் தீவிர வலது - மற்றும் தனியாக ஒரு அரசாங்கத்தை அமைக்க போதுமான பிரதிநிதித்துவம் கடந்த தேர்தல்களில் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜெர்மனி, நெதர்லாந்து மற்றும் ஐரோப்பாவின் வேறு சில நாடுகளைப் போலல்லாமல், அரசியல் கூட்டணிகள் ஒன்றாக ஆட்சி செய்யும் பாரம்பரியம் பிரான்சில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிகழ் காலத்தில் திரு. மக்ரோனின் அரசியல் எதிரிகள், குறிப்பாக தீவிர இடது மற்றும் தீவிர வலதுசாரிகள், தங்கள் சொந்த சித்தாந்த வேறுபாடுகள் இருந்தபோதிலும், ஜனாதிபதி- பிரதமர்களுக்கு எதிராக மீண்டும் மீண்டும் அணிதிரண்டு வருகின்றனர்.



**பாராளுமன்ற கலைப்பு சாத்தியம்?**

திரு. மக்ரோனை வீழ்த்த, தீவிர வலதுசாரிகளின் அழுத்தத்திற்கு அடிபணிந்து, பாராளுமன்றத்தை மீண்டும் கலைக்க கோரியுள்ளனர். குறிப்பாக மற்றொரு திட்டமிடப்படாத தேர்தல் நடைபெற சாத்தியம் உள்ளது என்று அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

மேலும் திரு. மக்ரோன் ராஜினாமா செய்வதை நிராகரித்து வந்தாலும், 2027 இல் தனது இரண்டாவது மற்றும் கடைசி ஜனாதிபதி பதவிக்காலம் முடிவடையும் வரை ஆட்சியை பார்த்துக் கொள்வதாக உறுதியளித்தார்.

எதிர்காலத்தில் தேசிய சட்டமன்றத்திற்கான புதிய தேர்தல்கள் பிரெஞ்சுத் தலைவருக்கு பல ஆபத்து நிறைந்ததாக இருக்கலாம். எதிர் வரும் தேர்தலில் மற்றொரு தீவிர வலதுசாரித் தலைவர் மரைன் லு பென்னின் கட்சி அதிக இடங்களைப் பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே மிகப்பெரிய தனிக் கட்சியான மரைன் லு பென்னின் தீவிர வலதுசாரி தேசிய பேரணி கட்சி வெற்றி பெறக்கூடும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இந்த நிலையை திரு. மக்ரோன் நீண்ட காலமாகத் தவிர்க்க முயன்று வருகிறார்.

திரு. மக்ரோனின் செல்வாக்கற்ற தன்மை அவரது மையவாத கட்சிக்கு கடுமையான தோல்வியை அளிக்கக்கூடும். இதனால் பாராளுமன்றத்தில் இப்போதுள்ளதை விட அவருக்கு குறைவான செல்வாக்கு கிடைக்கும் என்ற கருத்து நிலவுகிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வருடம் கடந்து விட்டது சம்பள அதிகரிப்பு கிடைக்குமா?

## ஜீவன் தொண்டமான் அரசாங்கத்திடம் கேள்வி

கொழும்பு, ஒக். 12

ஒருவருட காலத்தில் பெருந்தோட்ட பகுதியில் எத்தனை வீடுகளை கட்டினீர்கள் என்று அரசாங்கத்திடம் நேற்று கேட்டேன். பதில் கிடைக்கவில்லை. இன்றும் கேட்டேன் பதில் கிடைக்கவில்லை. சம்பள நிர்ணய சபை ஊடாக 1700 ரூபாயை நாங்கள் வழங்கும் போது, அது வேண்டாம் 2138 ரூபாய் தான் வேண்டும் என்று குறிப்பிட்டவர்கள் எங்கே? ஒருவருடம் கடந்து விட்டது. சம்பள அதிகரிப்பு கிடைக்குமா?, கிடைக்காதா? என பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பெருந்தோட்ட பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வீதிகள் இன்றும் புனரமைக்கப்படவில்லை. அபிவிருத்தி செய்யப்படவில்லை. எமது இருவருட ஆட்சியில் பொகவந்தலாவ வீதி, நுவரெலியா டன்சன் வீதிகளையும் புனரமைத்தோம். எமது அரசாங்கத்தில் பெருந்தோட்ட வீதி அபிவிருத்திக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டது. வீதி மற்றும் உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்தால் மாத்திரமே பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

அமைச்சர் ஒரு தவறான, பொய்யான விடயத்தை சபையில் குறிப்பிடும் போது அதனை சுட்டிக்காட்டி, திருத்துவதற்கு முற்படும் போது எமக்கு பேசுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. எமது ஒலிவாங்கி துண்டிக்கப்படுகிறது. இது தவறானதொரு செயல்பாடு. தவறுகளை சுட்டிக்காட்ட எமக்கும் இடமளியுங்கள்.

2000 பேருக்கு வீடுகள் வழங்குவதாக அமைச்சர் குறிப்பிட்டது பொய் என்று நான் குறிப்பிடுகிறேன். வீடுகள் வழங்கவில்லை. ஒரு சான்றிதழ் பத்திரமே வழங்கப்படுகிறது. அந்த பத்திரத்துக்கு எந்தவித சட்ட அந்தஸ்த்தும் கிடையாது.

அமைச்சராக நான் ஒருவருடகாலம் பதவி வகித்த போது 1300 இற்கும் வீடுகளை கட்டிமுடித்து அவற்றை கையளித்துள்ளேன். ஒருவருட காலத்தில் பெருந்தோட்ட பகுதியில் எத்தனை வீடுகளை அரசாங்கம் கட்டியது என்று கேட்டேன் பதில் கிடைக்கவில்லை.

மனிதன் குரங்கில் இருந்து பரிமானமடைந்தான் என்பதற்கு ஆதாரமாக ஒரு உறுப்பினர் ஆளும் தரப்பில் உள்ளார். இந்த பக்கத்தில் இருந்து அந்த பக்கத்துக்கு கைலாகு கொடுப்பதற்கு தாவுகிறார்.இது சபை முறைமை இல்லை. இவ்வாறான செயல்பாடுகளை திருத்திக் கொள்ளுங்கள்.

காணி உறுதிப்பத்திரத்தையே வழங்கவுள்ளீர்கள். அதில் 237 நான் தயாரித்தது. இதில் நீங்கள் தயாரித்தது எத்தனை? 2000 சான்றிதழ்களை வழங்கி வீடு வழங்குகிறோம் என்று ஏன் பொய்யுரைக்கின்றீர்கள். சம்பள அதிகரிப்பு கிடைக்குமா?, கிடைக்காதா?, ஒருவருடம் கடந்து விட்டது. ஏதும் கிடைக்கவில்லை- என்றார். (எ)

## "நுண்கடன் நிறுவனங்கள் மக்களை சுரண்டுகின்றன"

கொழும்பு, ஒக். 12

மத்திய வங்கியின் அனுமதியில்லாத நுண்கடன் நிதி நிறுவனங்கள் மக்களை சுரண்டி பிழைக்கின்றன. இந்த நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா?. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒருசில நிதி நிறுவனங்கள் 300, 200 சதவீதம் என்ற அடிப்படையில் வட்டி அறவிடுகின்றன. இதனால் அப்பகுதி மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் கேள்விகளை முன்வைத்து அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில், ஏறாவூர் மற்றும் மருதமுனை ஆகிய பிரதேசங்களில் நிதி நிறுவனம் ஒன்று 2014.02.05 காலப்பகுதியில் நடத்தப்பட்டது. மேற்படி நிதி நிறுவனத்தின் பணிப்பாளர்களாக பணியாற்றிய அஹமட் ஷெரின், முகமது ஷிஹாப் (ஷிஹாப் ஷெரீப்) மற்றும் பாத்திமா பர்ஸ மார்கார் ஆகியோரால் 1400 பேரிடம் சுமார் 170 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அறிவாரா?

கடந்த டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ள இவர்கள் இன்றளவிலும் காணாமல் போய் உள்ளனர் என்பதனை அமைச்சர் அறிவாரா?இதில் குறிப்பிட்டவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாது? இவர்கள் மோசடி செய்துள்ள தொகையை மீள அதன் உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா? அது தொடர்பில் பின்பற்றப்படும் நடவடிக்கைகள் யாவை? மற்றும் இவ்வாறான நிதி நிறுவனங்கள் தொடர்பான முறையான கண்காணிப்பு மேற்கொண்டு நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?

நிதி மோசடிகள் தொடர்பில் தொடர்ச்சியாக நான் பல பிரச்னைகளை கவனத்தில் கொண்டு வந்துள்ளேன். அதில் த பினான்ஸ் நிறுவன பிரச்னை சம்பந்தமாகவும் பலமுறை கதைத்துள்ளேன். அதில் முதலிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னமும் அவர்களுக்கான நீதி வழங்கப்படவில்லை.- என்றார். (எ)

## நாட்டில் எலிக்காய்ச்சல் குறித்து 12 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 12

நாட்டில் எலிக்காய்ச்சல் பரவுவதற்கு அதிக வாய்ப்புள்ள 12 மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டாரவின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்படி, காலி, இரத்தினபுரி, களுத்துறை, கேகாலை, குருநாகல், மாத்தறை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், பொலநறுவை, பதுளை, கம்பஹா மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்கள் எலிக்காய்ச்சல் பரவுவதற்கான அதிக வாய்ப்புள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

நோயைக் கட்டுப்படுத்தத் தேவையான மாத்திரைகள் நாட்டில் போதுமான அளவு கிடைப்பதாகவும், நெல் வயல்கள் போன்ற பகுதிகளில் வேலை செய்பவர்கள் முறையாக மருந்தை உட்கொள்ளுமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒரு மாதத்துக்கு 10 ஆயிரம் மாத்திரைகள் தேவைப்படுவதாகவும் மூன்று மாதங்களுக்குத் தேவையான மாத்திரைகள் தற்போது கையிருப்பில் இருப்பதாகவும், ஒன்பது மாதங்களுக்குத் தேவையான மற்றொரு இருப்பு விரைவில் பெறப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (எ)

## பாதுக்கையில் திடீரென சுகயீனமுற்ற 60 மாணவர்கள் மருத்துவமனையில்

கொழும்பு, ஒக். 12

பாதுக்கை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் திடீரென சுகயீனமுற்று 60 மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பாதுக்கை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

பாடசாலையில் வழங்கப்பட்ட காலை உணவை உட்கொண்ட 60 மாணவர்கள் திடீரென சுகயீனமுற்றுள்ளனர்.

இதனையடுத்து மாணவர்கள் அனைவரும் பாதுக்கை பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் 40 பேர் சிகிச்சை பெற்றுவிட்டு வீடு திரும்பிய நிலையில் ஏனையவர்கள் மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும், மூவர் மேலதிக சிகிச்சைக்காக ஹோமாகம ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலையில் வழங்கப்பட்ட காலை உணவை உட்கொண்டதால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக மாணவர்கள் இவ்வாறு சுகயீனமுற்றுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பாதுக்கை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## புதிய உச்சத்தை எட்டிய கொழும்பு பங்கு சந்தை

கொழும்பு, ஒக். 12

கொழும்பு பங்குச் சந்தை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதன் அதிகபட்ச சாதனையைப் புதுப்பித்தது. அனைத்து பங்கு விலைக் குறியீடும் 22,318.72 யூனிட்டுகளாக உயர்ந்தது.

அனைத்து பங்கு விலைக் குறியீடும் பகலில் 143.98 யூனிட்கள் அதிகரிப்பை அடைய முடிந்தது, இது முந்தைய நாளுடன் ஒப்பிடும்போது 0.65 சதவீத அதிகரிப்பாகும்.

இதேவேளை, 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை 8. 45 பில்லியன் ரூபாய் பரிவர்த்தனை வருவாய் பதிவாகியுள்ளது.

உள்ளூர் கொள்முதல்கள் 8.30 பில்லியன் ரூபாயாகவும் உள்ளூார் விற்பனை 8.21 பில்லியன் ரூபாயாகவும் வெளிநாட்டு கொள்முதல்கள் 150 மில்லியன் ரூபாயாகவும், வெளிநாட்டு விற்பனை 248 மில்லியன் ரூபாயாகவும் பதிவானது. (எ)

## அன்பை விதைத்தால்...

இந்தியாவின் கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் உள்ள கொன்னத்தடி என்ற பகுதியைச் சேர்ந்த 70 வயது மூதாட்டி ஒருவர், தனது மகனைக் காண டுபாய்க்குச் சென்றார். அங்கு "பாரா கிளைடிங்" செய்யும் அவரது விருப்பத்துக்கு அவர் மகன் ஏற்பாடு செய்ய, சுமார் 13,000 அடி உயரத்திலிருந்து குதித்து தனது ஆசையை நிறைவேற்றி கொண்டதோடு, அதிக வயதான நிலையில் "பாரா கிளைடிங்" செய்த பெண் என்ற சாதனையையும் படைத்தி ருக்கிறார் அந்த மூதாட்டி.

தனிமையில் வாழும் எண்ணற்ற முதி யோர் நோயின்றி நீண்ட காலம் வாழ் வது சவாலானது என்பதில் ஐயமில்லை. எவரிடமும் தம் மன உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள இயலாத தனிமையில் உள்ளவர்கள், மன அழுத்தத்துக்கு உள்ளா வதோடு, அதன் விளைவாக உடல் சார்ந்த உபாதைகளும் உண்டாகி அவர்களது ஆயுளும் குறைகிறது.

"மற்றவர்களுடன் நன்றாகப் பழகுபவர் கள் மற்றும் அன்பான உறவைக் கொண் டவர்கள் அப்படி இல்லாதவர்களைவிட நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்கின்றனர்" என்கிறார் ஹார்வர்ட் பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியின் மனநலப் பேராசிரியர் ராபர்ட் வால்டிங் கர்.

பிறர்மேல் நாம் காட்டும் அன்பு நமது மன நலனையும், உடல் நலனையும் மேம் படுத்துவத்துடன் ஆயுளையும் அதிகரிக் கும். எனவே, சக மனிதர்கள் மீது அன்பை விதைப்போம்!

## மாகாணசபை தேர்தல்கள்:...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தினால் சில தினங்களுக்கு முன்னர் கூட்டப்பட்ட மகாநாடு ஒன்றில் எதிர்க்கட்சிகளும் சில சிவில் சமூக அமைப்புக்களும் தாமதமின்றி விரைவாக மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு நெருக்குதல்களை கொடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தன. அடுத்த வருடம் வரை காத்திராமல் இந்த வருடத்திற்குள்ளாகவே தேர்தல்களை நடத்த வேண்டும் என்றும் அவை கோரிக்கை விடுத்தன.

தென்னிலங்கையில் மாகாணசபை தேர்தல்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் இவ்வாறாக அரசாங்கத்திடம் கோரிக்கையை முன்வைத்துவரும் நிலையில், வடக்கு, கிழக்கில் தமிழ் அரசியல் கட்சிகள் இது விடயத்தில் அரசாங்கத்துக்கு நெருக்குதல்களை கொடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய்வதில் பெரிதாக அக்கறை காட்டாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்து ஒரு வருடம் நிறைவடையும் நிலையில், இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் அக்கறை காட்டாததையும் மாகாணசபை தேர்தல்கள் தாமதிக்கப்படுவதையும் சுட்டிக்காட்டிய தமிழரசு கட்சி, ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவகாசம் கோரி அவருக்கு கடிதத்தை அனுப்பியிருந்தது. ஜனாதிபதி விரைவில் தமிழரசு கட்சியின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசுவார் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் போன்றவர்கள் செய்தியாளர்கள் மாகாநாட்டில் கூறினார்களே தவிர, ஜனாதிபதியிடமிருந்து எந்தவிதமான பதிலும் தமிழரசு கட்சிக்கு கிடைத்ததாக அறிய வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றில்....

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை வட்டுக்கோட்டை பொலிஸார் நெறிப்படுத்தினர். (அ-05)

## சட்டவிரோத....

வடக்கின் 5 மாவட்டங் களினதும் மாவட்ட செயலர்கள் மற்றும் ஆளுநர் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனை ,சட்ட விரோத மணல் அகழ்வு ,கசிப்பு உற்பத்தி, கால்நடை கடத்தல் ,கோஷ்டி மோதல் போன்றவை அதிகரித்துள்ளன. இவை தொடர்பாக முறைப்பாடுகள் மற்றும் ஆதாரங்கள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டாலும் சில வேளைகளில் அசமந்த போக்குடன் பொலிஸார் நடந்து கொள்கின்றமையால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக மாவட்ட செயலாளர்கள் சுட்டி காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டம் தொடர்பில் மாவட்ட செயலாளர் தெரிவிக்கும் போது,

போதைப்பொருள் பாவனை, சட்ட விரோத மணல் அகழ்வு, கசிப்பு உற்பத்தி என்பன இடம்பெறுவதாகவும் கால்நடைகள் கடத்தலைக் கட்டுப் படுத்துவதற்கு மண்டைத்தீவு சந்தி மற்றும் புங்குடுதீவு மடத்துவெளி ஆகிய இடங்களில் பொலிஸ் காவலரண்ங்கள் அமைக்கப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் ஒலிபெருக்கி பாவனைக்கான கட்டணம் பொலிஸார் அறவிடுகின்றமையால் அதிக சத்தத்துடன் ஒலி பெருக்கிகள் பயன்படுத்தப்படும்போது அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்ற பொறுப்பும் பொலிஸாருக்கு உள்ளது என தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில், பெண் பொலிஸாரின் பற்றாக்குறை, சட்ட விரோத மணல் அகழ்வு, அரச காணி தொடர்பான பிணக்குகளில் பிரதேச செயலர்களுடன் இணைந்து செயற்பட பொலிஸார் தவறுகின்றமை ஆகிய விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கசிப்பு விற்பனை மிகப் பிரதான பிரச்னையாக உள்ளதாகவும் அங்கு கசிப்பு விற்பனையில் ஈடுபடும் குடும்பங்கள் தொடர்பான விவரங்களை திரட்டியுள்ளபோதிலும் நடவடிக்கை எடுப்பதில் சிக்கல்கள் நிலவுதாக மாவட்ட செயலர் குறிப்பிட்டார்.

அதேபோன்று சட்டவிரோத மணல் அகழ்வு, மரம் மற்றும் கால்நடைகள் கடத் தல் என்பனவும் நடைபெறு வதாகச் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோத மணல் அகழ்வு பெரும் பிரச்னையாக உள்ளதாகவும் கல்லாறை அண்மித்து காட்டை அழித்து மணல் அகழ்வு நடைபெறுகின்றது எனவும் மாவட்ட செயலர் தெரிவித்தார்.

அங்கு அகழப்படும் மண்ணை விற்பனைக்காக சேகரித்து வைக்கும் இடத்துக்கு கொண்டு வரப்படும் பாதையில் பொலிஸ் காவலரண் அமைப்பதன் ஊடாக இதனைத் தடுக்கலாம் கௌதாரிமுனை கடற்கரைக்கு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகளவு இளையோர் வருவதாகவும் அங்கு மதுபானம் அருந்தி விட்டு முரண்பாடுகளில் ஈடுபடுவதாகவும் குறிப்பிட்டதுடன் பொலிஸ் காவலரண் அங்கு அமைக்கப்பட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். அதேநேரம், பாடசாலை மாணவர்களுக்கு பச்சைகுத்தும் நிலையங்களுக்கு எதிரான சட்டநடவடிக்கைக்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் தெரிவித்தார். இவ்வாறாக மாவட்ட ரிதியாக குற்றச்சாட்டுகள் முன்வைத்தனர். (அ)

## பிரதமர்...

பகிரப்பட்ட எதிர்காலம்: பெண்களின் முழுமையான வளர்ச்சிக்கான புதிய மற்றும் துரிதப்படுத்தப்பட்ட செயல் முறை" என்ற தலைப்பில் நடைபெறும், சீனா மற்றும் ஐ.நா. இணைந்து ஏற்பாடு செய்துள்ள பெண்கள் தொடர்பான உலகளாவிய தலைவர்கள் கூட்டத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய உரை நிகழ்த்துவார்.

இந்தப் பயணத்தின் போது, சீன ஜனாதிபதிஷி ஜின்பிங் மற்றும் பிரதமர் லி கியாங் உள்ளிட்ட பல உயர் மட்ட தலைவர்களையும், பிரதமர் ஹரிணி அமரசூரிய சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

## பாதுகாப்பு...

வழங்க வாய்ப்புள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதிகளின் இந்த கோரிக்கையை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள பாதுகாப்பு மறு ஆய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை இரத்து செய்யும் சட்டம் காரணமாக அவர்கள் பயணித்த வாகனங்கள், உத்தியோகபூர்வ இல்லங் கள் உள்ளிட்ட பல சலுகைகளை இழந்த னர்.

எனினும் இந்த சட்டம் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.(அ)

## மின்சார...

இதன்போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் நாட்டு மக்களுக்கு நற்செய்தியொன்றை வழங்க தயாராகி வருகின்றது. மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தான் அந்த நற்செய்தியாகும்.

இந்த மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படக் கூடாது என்றே நாம் பிரார்த்திக்கிறோம். அரசாங்கம் ஏதோ ஒருவகையில் மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால், ஐக்கிய மக்கள் சக்தியினரான நாம், மக்களுடன் வீதிக்கு இறங்குவோம்.

இதற்கு எதிராக நாம் வீதியில் இறங்கி நடவடிக்கை எடுப்போம். மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட் டால் வீட்டுப் பொருளாதாரத்தில் தாய்மார்களும் பெண்களும் தான் அதிகம் பாதிக்கப்படுபவர்கள்.

அரசாங்கத்தின் இந்த மோசமான கொள்கைகளை தோற்கடிக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

## அரசாங்கத்தை...

பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பொது ஜன ஐக்கிய முன்னணித் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா, பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சஞ்ஜீவ எதிரிமான்ன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் நவம்பர் மாத நடுப்பகுதியில் தற்போதைய அரசாங்கத்துக்கு ஒரு வருடம் நிறைவடைவதையொட்டி, அரசாங்கத்துக்கு எதிராக நடத்தப்படவுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காகவே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அடுத்த மாதம் அரசாங்கத்துக்கு எதிராக நடத்தப்படவுள்ள எதிர்ப்புப் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (அ)

# 'தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்' நூல் அறிமுக நிகழ்வு 18ஆம் திகதி யாழ்.நகரில்

யாழ்ப்பாணம், ஒக். 12

பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய 'தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்' நூல் அறிமுக நிகழ்வு யாழ்நகர் தந்தை செல்வா கலையரங்கில் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சட்டத்தரணி சோ. தேவராஜா தலைமையில் இடம் பெறவிருக்கிறது.

இந்த நிகழ்வில் கலாநிதி சிவகுமார் சுப்பிரமணியம் (பொறியியலாளர் ), உளநல மருத்துவர் வைத்தியக் கலாநிதி எஸ். சிவதாஸ், மூத்த பத்திரிகையாளர் அனந்த் பாலகிட்ணர், சமூக, அரசியல் செயற்பாட்டாளரும் அரசியல் ஆய்வாளருமான கருணாகரன் சிவராஜா ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். இந்த நூல் மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தின் வெளியீடாகும். (அ)

## பிரபாகரன் உயிருடன்...

கடனாகவே இறக்குமதி செய்கி றோம். எனவே அவர்கள் அவற்றை அனுப்பவில்லை என்றால் எங்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது என்றார். அதன் பிறகு, பசில் ராஜபக்ஷவுடனான கலந்துரையாடல்களுக்குப் பிறகு, அவர் ஒரு தொலைபேசி அழைப்பே மேற் கொண்டு பீ.பி. ஜயசுந்தரவுக்கு சொன்னார், ஒரு தேவையொன்று உள்ளது, உடனடியாக இராணுவத் தளபதிக்கு 100 மில்லியன் டொலரை வழங்குமாறு கூறினார். 5 நிமிடத்தில் அவர் அதனைச் செய்தார். அதன் பிறகு, ஒரு மணி நேரம் வரையில் ஒரு நட்பு ரீதியான கலந்துரையாடல் பசிலுடன் இடம்பெற்றது. 2005 ஆம் ஆண்டில், வடக்கு தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காமல் இருப்பதற்காக புலிகள் அமைப்பு பயன்படுத்தப்பட்டதாக பசில் ராஜபக்ஷ ஒப்புக்கொண்டார்.

ஜனாதிபதி தேர்தலில் வழக்கு மக்கள் வாக்களிக்காமல் இருப்பதை அவர்கள் உறுதி செய்ததோடு, அதற்காக நாங்கள் என்ன செய்ய வேண்டுமென கேட்க கடற்புலிகள் பயன்படுத்தும் டோரா வகை படகுகளுக்காக மலேசியாவுக்கு பணம் வழங்கவேண்டுமெனவும் அதற்காக 2 மில்லியன் வழங்குமாறும் கோரியுள்ளனர். அதற்கமைய, அந்த அமைப்புக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அது வெளிநாடு ஒன்றில் வைத்து வழங்கப்பட்டது. அந்த நாடு எது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. அதிலிருந்து தாக்குதல் படகுகள் வந்து எங்களைத் தாக்கின. ஏராளமான அப்பாவி கடற்படை வீரர்கள் இறந்தனர், இவர்கள் செய்தது தேச துரோக செயல் இல்லையா? மகிந்த ராஜபக்ஷவின் மகன் கடற்படையில் பணியாற்றியபோதிலும் அவர் கடலுக்கு சென்று யுத்தம் புரியவில்லை. - என்றார். (அ)

## வாக்குறுதி...

அதிகரித்துவிட்டதா? இல்லைத்தானே. அப்படியொன்றும் தெரியவில்லையே. நாங்கள் கடந்தமுறை அமைச்சர்களை நியமிக்கும்போது தேவையெனில் மேலும் சிலரை நியமிப்பதற்கான ஒரு வெற்றிடத்தை வைத்திருந்தோம். எனினும் நாங்கல் எல்லையை கடக்க மாட்டோம். இதுவே மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி. எங்களுக்கு தற்போது பொறுப்புக்கள் அதிகரித்ததன் காரணமாக அதற்காக பணியாற்றவேண் டிய தேவையும் அதிகரித்துள்ளது. எனவே கடமைகளை பகிந்தளிக்கவேண் டிய தேவை உள்ளது. அதற்காகவே இந்த அமைச்சரவை மறுசீரமைப்பு நடவடிக்கை. ஏனைய அனைவரையும் பற்றி எங்களுக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தோழரைப் பற்றி நன்கு தெரியும். முழு அர்ப்பணிப்புடன் தனது கடமையை மேற்கொண்டு வரும் ஒரு அரசியல்வாதி என்ற ரீதியில் அவருக்கு எந்தவொரு மோசடி நடவடிக்கையிலும் ஈடுபடவேண்டிய அவசியம் இல்லை. அங்கு வேறு ஏதோ ஒரு சம்பவம் நடந்துள்ளது. அதனை ஆராய்ந்து பார்ப்பதற்காகவே ஜனாதிபதி ஒரு விசாரணை குழுவை நியமித்துள்ளார்-என்றார். (அ)

## நாட்டுக்கு...

அரசாங்கம் ஜனநாயகக் கட்டமைப்புக்குள் புதிய சட்டங்களை உருவாக்கி வருவதாகவும், ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இந்நாட்டு முதலீட்டுச் சூழலைப் பலப்படுத்துவதற்காக இனவாதம் மற்றும் மதவாதம் என்பவற்றை ஒதுக்கித் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல், செயல்திறனான அரச சேவையை உருவாக்குதல், இராஜதந்திர உறவுகளை வெளிப்படையான முறையில் பராமரித்தல் மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் மூலம் தொழில்நுட்ப தடைகளை வெற்றி கொள்ளுதல் ஆகிய நோக்கங்களை அடைய அரசாங்கம் செயல்பட்டு வருவதாக ஜனாதிபதி அநுர குமார, அமெரிக்கத் தூதுக்குழுவிடம் மேலும் தெரிவித்தார்.

## ஒன்லைன்...

ஒன்லைன் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். குறித்த வர்த்தகமானது நேற்று முன் தினம் இரவு சரிவடைந்ததால் அவருக்கு ஒரு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அவர் மனவிரக்தியடைந்த நிலையில் தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இதற்கு முன்னரும் இவர் ஒருதடவை பல இலட்சம் ரூபா நட்டத்தை சந்தித்த நிலையில் அவரது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் அந்த நட்டத்தில் இருந்து அவரை மீட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## மாகாண...

வந்த புதிய சட்டத் தொகுப்பு 2018 முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இதற்கு பாராளுமன்றமே முழுப் பொறுப்பு என்று வலியுறுத்தினார்.

எனவே, இந்த விடயத்தில் பாராளுமன்றமே ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் தேர்தலைப் பற்றி மட்டும் பேசாமல், தொடர்புடைய சட்டத்தை விரைவில் நிறுவுவதில் உண்மையிலேயே ஆர்வம் காட்ட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எல்லை நிர்ணயம் 2018 இல் வழங்கப்பட்ட 50:50 கலப்பு விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் ஒருங்கிணைந்த பகுதியாகும்,

மேலும் அதன் பணிகள் முடிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் உட்பட முழு பாராளுமன்றமும் அதை எதிர்த்தது.

பின்னர், சட்டத்தை உறுதி செய்ய முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய உட்பட குழு நியமிக்கப்பட்டிருந்தாலும், பாராளுமன்றம் பிளவு அடைந்ததால் குறித்த செயல்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன.

இதனால், சட்டம் இன்னும் நிறைவேறாததால், மாகாண சபை தேர்தல் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளது- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## தமிழக கடற்றொழிலாளர் 47 பேர் கைது செய்யப்பட்டமை அதிர்ச்சி!

முதல்வர் ஸ்டாலின் இந்திய அரசுக்கு கடிதம்

சென்னை, ஒக். 12

தமிழக கடற்றொழிலாளர்கள் 47 பேர், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளமை அதிர்ச்சியளிப்பதாகத் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு எழுதிய கடிதத்தில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

ஒரே நாளில் அதிக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழக முதல்வர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள தமிழக கடற்றொழிலாளர்களை விடுதலை செய்துகொள்ள நடவடிக்கை எடுக்குமாறும், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னதாக, இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்தமை தொடர்பில் தலைமன்னார் மற்றும் நெடுந்தீவு கடற்பரப்பில் 47 இந்திய கடற்றொழிலாளர்கள் நேற்று முன் தினம் அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

இதன்போது அவர்களின் 05 படகுகளும் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

விளக்கமறியலில் உள்ள இந்திய மீனவர்களை

## உடன் விடுவிக்குமாறு உறவுகள் கோரிக்கை!

சென்னை, ஒக். 12

இராமேஸ்வரம் மீன் பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்று எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரி கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினர் கண்ணீருடன் மத்திய மாநில அரசுகளுக்கு கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்று தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 30 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி எதிர்வரும் 23ஆம் திகதி வரை அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள மீனவர்களை நம்பி மீனவர்களின் குடும்பத்தினர் வாழ்ந்து வந்த நிலையில் மீனவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளதால், வாழ்வாதாரத்தை இழந்துள்ளதாகவும் கைது செய்யப்பட்ட மீனவர்களில் ஒருவரின் மனைவி தற்போது நிறைமாதக் கர்ப்பிணியாக இருப்பதால் பிரசவ நேரத்தில் தனது கணவன் தன்னுடன் இருக்கவேண்டும் எனவும் தெரிவித்து கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய மத்திய மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்களின் குடும்பத்தினர் கண்ணீருடன் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (அ)

## தங்க விற்பனை 60 வீதம் சரிவு

கொழும்பு, ஒக். 12

உலக சந்தையில் தங்கத்தின் விலை அதிகரித்ததை அடுத்து, உள்ளூர் சந்தையிலும் தங்கம் அதி உச்சத்தை தொட்டுள்ளது.

இந்த வாரத்தில் மட்டும் 24 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை 15,000 ரூபாய் அதிகரித்துள்ளது என்று அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார். இந்த விலை உயர்வால், தங்க விற்பனை சுமார் 60 சதவீதம் குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார். தங்க பிஸ்கட்களை இறக்குமதி செய்யும் போது 28 சதவீதம் வரி செலுத்த வேண்டும் என்றும், மற்ற வரிகளு டன் சேர்த்து 50 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எனவே, நகை விற்பனையில் ஈடுபடும் யாரும் தங்க பிஸ்கட்களை இறக்குமதி செய்ய மாட்டார்கள் என்றும் அவர் கூறினார். (எ)

# சி.ஐ.டி. விசாரணைகளை துரிதமாக்க புதிய திட்டம்!

### 10,000 புதிய அதிகாரிகள் நியமனம்



கொழும்பு, ஒக்.12

**நாட்டில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்கு 10,000 புதிய அதிகாரிகளை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகப் பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.**

பொலிஸ்துறைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் குறித்த அதிகாரிகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் தற்போது 24 மணித்தியாலமும் பணியாற்றுகின்றனர். இவற்றிலிருந்த அரசியல் தலையீடுகளை நாம் நீக்கியுள்ளதால் அதிகாரிகள் சிறப்பாகச் செயற்படுவதாகவும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனினும், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் காவல்துறைக்கும் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் 5,000 பேரை ஆட்சேர்ப்பு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துட், 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் மேலும் 5,000 பேரை ஆட்சேப்புச் செய்யவுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல கூறினார். (அ)

# போதைப்பொருள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்த தந்தைக்கும் மகனுக்கும் வாள்வெட்டு!

### பருத்தித்துறைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 12

பருத்தித்துறை பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடும் கும்பல் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை பிராந்திய இணைப்பாளருக்கும் அவரது தந்தைக்கும் போதைப்பொருள் கும்பல் வாளால் வெட்டித் தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

தும்பளைப் பகுதியில் அவர்களது வீட்டுக்குச் சென்ற வன்முறைக் கும்பல் , வீட்டில் இருந்த மகன் மற்றும் தந்தையர் மீது வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது

சம்பவத்தில் காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தும்பளைப் பகுதியில் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனை ஆகியன அதிகரித்து உள்ளன. இந்நிலையில் போதைப்பொருள் விற்பனை தொடர்பிலான சி.சி.ரி.வி. காணொளி தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை இணைப்பாளருக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

அதனை அவர் பொலிஸாரிடம் கையளித்து நடவடிக்கை எடுக்குமாறு கூறியுள்ளார்.

அது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்காத நிலையில் ஓரிரு நாட்களின் பின்னர் அப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமெராக்கள் அடித்து நொருக்கப்பட்டதுடன் போதைப் பொருள் விற்பனை தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய தேசிய மக்கள் சக்தியின் இணைப் பாளருக்கும் தொலைபேசி ஊடாக மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ள.

அவை தொடர்பில் அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தபோதிலும் பொலிஸார் காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை.

இந்நிலையில் குறித்த சம்பவங்கள் இடம்பெற்று சுமார் 20 நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை வேளை வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் வீட்டினுள் இருந்த தேசிய மக்கள் சக்தியின் இணைப்பாளர் மற்றும் அவரது தந்தை மீது வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் மன்னார் இளைஞருக்கு 10 ஆண்டுகள் சிறை!

கொழும்பு, ஒக். 12

ஐஸ் போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் குற்றவாளி யாக நிரூபிக்கப்பட்ட மன்னாரைச் சேர்ந்த மேசன் தொழிலாளிக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரஷாந்த கொடவெல 10 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

மன்னாரைச் சேர்ந்த 21 வயது இளைஞருக்கே இந்த தண்டனை விதிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதி ஐஸ் போதைப் பொருளை ஏற்றிச் சென்றபோது பொலிஸாரால் மன்னார் எழுத்தூர் சந்திக்கு அருகில் கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர், சட்டமா அதிபர் 2008 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க போதைப்பொருள் மற்றும் மனோவியல் பொருட்கள் சட்டத்தின் கீழ் பிரதிவாதிக்கு எதிராக குற்றச்சாட்டுகளை பதிவு செய்தார்.

விசாரணைக்குப் பிறகு தீர்ப்பை வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்குத் தொடுநரால் பிரதிவாதி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

அதன்படி, இந்த தண்டனை பிரதிவாதிக்கு விதிக்கப்படுவதாக நீதிபதி தனது தீர்ப்பில் கூறினார் (அ)

# சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட புறாக்களை பறிமுதல் செய்த கடற்படையினர்!

கொழும்பு, ஒக். 12

இந்தியாவிலிருந்து கடல் வழியாக இலங்கைக்குச் சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட இலட்சக்கணக்கான ரூபாய் மதிப் புள்ள புறாக்களை இலங்கை கடற் படை பறிமுதல் செய்தது.

இந்தியாவிலிருந்து கடல் வழியாக கற்பிட்டிக்கு இந்தப் புறாக்கள் கொண்டு வரப்பட்டதாகக் கடற்படை கூறுகிறது.

இந்த படகை ஆய்வு செய்த போது, படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெட்டிகளில் 149 புறாக்களை கடற்படை கண்டுபிடித்தது.

இதனடிப்படையில் படகை செலுத்திய நபரும் மற்றொரு நபரும் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட புறாக்கள் இராமேஸ்வரம் அல்லது அருகிலுள்ள இடத்திலிருந்து இலங்கைக் கடல் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டு, பின்னர் இலங்கை மீன்பிடி படகுகளில் உள்ளவர்களிடம் ஒப்படைக்க முயன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடல் வழியாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட புறாக்கள் கடற்படையால் வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

இங்குள்ள முக்கிய கடத்தல்காரர்கள் ஒரு ஜோடி புறாக்களை ரூ.50,000 முதல் 100,000 வரை விற்கத் தயாராக இருந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org